# இலக்கு

GLOBAL TAMIL MEDIA CENTER

வாராந்த மின்னிதழ்

ilakku.org

SUBSCRIBE US! youtube.com/c/IlakkuWeb

LIKE US! facebook.com/ilakku.ilakku.10

FOLLOW US! twitter.com/Ilakku1

இதழ் 305 | வெள்ளி, செப்டம்பர் 20, 2024 | 18 பக்கங்கள்


## மக்கள் புரட்சி வெடிக்கட்டும்...



## தயாராகியுள்ள தேர்தல் களம்

## தமிழ் மக்களின் தீர்ப்பு என்ன?

அகிலன்



## ஒரு தேர்தலும் இரு தேசங்களும்

ஆர்த்தீகன்

22.09.1995 அன்று யாழ். நாகர்கோவில் பாடசாலையில் படுகொலை செய்யப்பட்ட 39 மாணவர்களின் 29ம் ஆண்டு நினைநாள்



info@ilakku.org

© 2024 இலக்கு இணையம்

## தியாகதீபம் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வை நடத்த நீதிமன்றம் அனுமதி



நல்லூரில் அமைந்துள்ள தியாக தீபம் திலீபனின் நினைவிடத்தில் அஞ்சலி நிகழ்வை நடத்த அனுமதிக்க கூடாது என காவல் துறையினர் விடுத்த கோரிக்கையை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

சட்டத்தரணி மணிவண்ணன், நாடாளுமன்ற உறுப்பினர் செல்வராசா கஜேந்திரன் உள்ளிட்டோர் திலீபனின் நினைவிடத்திற்கு உணர்வுபூர்வமாக அஞ்சலி செலுத்த நடவடிக்கை எடுத்து வரும் நிலையில், இந்த நினைவேந்தல்களுக்கு தடை விதிக்கக் கோரி காவல்துறையினர் நீதிமன்றத்தை அணுகியிருந்தனர்.

இது தொடர்பான வழக்கு விசாரணைக்காக எடுக்கப்பட்ட போது இருதரப்பு வாதங்களையும் கேட்ட நீதியரசர் ஏ.ஆனந்த ராஜா, 2011ஆம் ஆண்டு புலிச் சின்னங்களைப் பயன்படுத்த தடை விதித்து வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டது. எனினும் இறந்தவர்களின் நினைவேந்தல் நடத்த தடை இல்லை. இதன் பின்னர் 13 வருடங்களாக மக்கள் நினைவேந்தலை அனுஷ்டித்து வருகின்றனர். அவற்றைத் தடுப்பதற்கு ஜனாதிபதியோ, பாதுகாப்பு அமைச்சோ, பாராளுமன்றமோ எந்தவொரு சட்ட நடவடிக்கையும் எடுக்கவில்லை.

இந்நிலையில், அஞ்சலி நிகழ்வுகளை நடத்த தடை விதிக்க வேண்டும் என காவல்துறையினர்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## லெபனானில் 3,000 செய்தி பரிமாற்றக் கருவிகள் வெடித்ததால் 2,800பேர் காயம், 12 பேர் பலி

செய்திகளை பரிமாறுவதற்கு பயன்படுத்தப்படும் கையடக்க செய்தி பரிமாறும் 3,000 இற்கு மேற்பட்ட இலத்திரனியல் கருவிகள் ஒரே சமயத்தில் வெடிக்கவைக்கப்பட்டதால் லெபனானில் இரண்டு சிறுவர்கள் உட்பட 12 பேர் கொல்லப்பட்டுள்ளதுடன், 2800 இற்கு மேற்பட்டவர்கள் காயமடைந்துள்ளனர்.



கடந்த செவ்வாய்க் கிழமை(17) இடம்பெற்ற இந்த சம்பவத்திற்கு இஸ்ரேலின் புலனாய்வு அமைப்பான மொசாட்டே காரணம் என பல மேற்குலக ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

தாய்வானில் இருந்து அனுப்பப்பட்ட இந்த Gold Apollo கருவிகளில் வெடிக்கும் சாதனங்களை இஸ்ரேல் பொருத்தியதாக அமெரிக்க மற்றும் இஸ்ரேலிய புலனாய்வுத்துறை அதிகாரிகளை மேற்கொள்காட்டி த நியூயோர்க் ரைம்ஸ் தகவல் வெளியிட்டுள்ளது. 5,000 சாதனங்களில் வெடிக்கும் சாதனங்கள் பொருத்தப்பட்டபோதும் 3,000 சாதனங்களே வெடித்துள்ளன.

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## இந்தியா முஸ்லீம்களுக்கு எதிரான நாடு – ஈரான்

மியான்மார், காசா மற்றும் இந்தியா உட்பட பல நாடுகளில் முஸ்லீம் மக்கள் துன்பத்தை சந்திக்கும் போது நாம் அமைதியாக இருப்பது ஒரு முஸ்லீம் குடிமகனுக்கு ஏற்றதல்ல என ஈரானின் ஆன்மீகத் தலைவர் சாயிட் அலி கொசினி ஹமேனி தெரிவித்துள்ளார்.



இஸ்லாம் மதத்திற்கு எதிரானவர்கள் எப்போதும் எம்மை முஸ்லீம்களாக ஒன்றிணைய வைக்கின்றனர். உலகில் உள்ள நாடுகளில் முஸ்லீம் மக்கள் பாதிக்கப்படும்போது நாம் அதனை பார்த்துக்கொண்டிருக்க முடியாது என அவர் தனது ருவிட்டர் தளத்தில் இந்த வாரம் தெரிவித்துள்ளார்.

எனினும் ஹமேனியின் கருத்துக்கு இந்தியா தனது கடுமையான எதிர்ப்பை வெளியிட்டுள்ளது. இது

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

## குறுகிய கால தேர்தல் கண்காணிப்பாளர்கள் நியமிப்பு– ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு குழு

இலங்கையில்ஜனாதிபதிதேர்தல் கண்காணிப்பில் ஈடுபட்டுள்ள ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பாளர்கள் அனைத்து மாவட்டங்களிலும் 32 குறுகிய கால தேர்தல் கண்காணிப்பாளர்களை கண்காணிப்பில் ஈடுபடுத்தியுள்ளனர்.

26 கண்காணிப்பாளர்களை ஏற்கனவே கண்காணிப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளர். அவர்கள், ஆகஸ்ட் 29 முதல் இலங்கையின் அனைத்து மாகாணங்களிலும் தேர்தலிற்கான தயாரிப்பு நடவடிக்கைகள்,தேர்தல் பிரச்சாரத்தை கண்காணித்து வருகின்றனர்.

'குறுகிய கால கண்காணிப்பாளர்கள் பிரச்சாரம் முடிவடைந்ததன் பின்னரான காலத்தில் இடம்பெறும் தேர்தல் தொடர்பான நடவடிக்கைகள் மற்றும் ஜனாதி பதி தேர்தல் வாக்களிப்பு நிலையங்களில் வாக்களிப்பு ஆரம்பமாவது,




வாக்குகள்எண்ணப்படுவது தேர்தல் முடிவுகள் வெளியிடப்படுவது போன்றவற்றை கண்காணிப்பார்கள்.

எங்கள் பணியை வலுப்படுத்தும் குறுகியகால பார்வையாளர்கள் நகரங்கள் மற்றும் கிராமங்களிற்கு செல்வார்கள், அவர்களுடைய கண்காணிப்புகள் ஒன்பது மாகாணங்கள் குறித்த அவதானிப்புகளை மேற்கொள்வதற்கு இன்றியமையாதவையாகும் என ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழு தெரிவித்துள்ளது.

## இஸ்ரேலுடன் இந்தியா உடன்பாடு – இஸ்ரேல் செல்லும் இந்திய பணியாளர்கள்



இஸ்ரேலுக்கும்-இந்தியாவுக்கும் இடையில் கடந்த வருடம் மே மாதம் ஏற்படுத்தப்பட்ட உடன்பாட்டின் அடிப்படையில் இஸ்ரேலுக்கு 42,000 இந்தியர்களை பணிக்கு அனுப்புவதற்கு இந்தியா திட்டமிட்டுள்ளது.

கட்டிட நிர்மாணத்துறை மற்றும் தாதிகள் பணிகளுக்கு முதல் கட்டமாக 10,349 பேர் அனுப்பப்பட்டிருந்தனர். தற்போது மீண்டும் 10,000 பணியாளர்களை அனுப்புவதற்கு இந்தியா திட்டமிட்டுள்ளது. உத்தரப்பிரதேசம், தெலுங்கானா மற்றும் ஹரியானா ஆகிய மாநிலங்களில் இருந்து பணியாளர்கள் அனுப்பப்பட்டிருந்தனர் என கடந்த திங்கட்கிழமை(16) இந்திய ஊடகம்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

## ஜனாதிபதித்தேர்தல்: புகைப்படம் எடுப்பவர்களுக்கு எச்சரிக்கை

நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலின் போது வாக்களிப்பு நிலையங்கள் மற்றும் வாக்குச் சீட்டுகளை புகைப்படம் எடுப்பதை தவிர்க்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் ஆணைக்குழு வெளியிட்டுள்ள அறிக்கையில், வாக்குப் பதிவு தொடர்பான நடவடிக்கைகளை புகைப்படம் எடுத்தல் மற்றும் அவற்றை சமூக வலைதளங்களில் பதிவேற்றுவதைத் தவிர்க்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

இவ்வாறான செயல்கள் தேர்தல் சட்டத்தை மீறிய செயலாக கருதப்படும் என ஆணைக்குழு எச்சரிக்கை விடுத்துள்ளது.

## நாட்டை மாசுபடுத்திய பிரித்தானியாவிடம் இழப்பீடு கோரும் நைஜீரியா

நைஜீரியாவின் டெல்ட்டா பகுதியில் அதிகளவான எண்ணைக் கழிவுகளை வளமான நிலத்தில் சிந்தியதால் சூழலுக்கு ஏற்பட்ட இழப்புக்காக பிரித்தானியா அரசிடம் 310 மில்லியன் டொலர்களை அல்லது 505 பில்லியன் நைராவை நைஜீரியாவின் சமூகம் கோரியுள்ளது.

பிரித்தானியாவின் செல் நிறுவனம் இந்த சுற்றாடலை மாசுபடுத்தும் நடவடிக்கையில் ஈடுபட்டதாக நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்ட வழக்கில் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது. லஜே




சமுதாயத்தை சேர்ந்த 1200 பேர் இந்த முறைப்பாட்டை மேற்கொண்டுள்ளனர்.

பிரித்தானியாவின் செல் நிறுவனம் நீதி மன்றத்தால் விதிக்கப்பட்ட நிபந்தனைகளை மீறி நைஜீரியாவில் உள்ள

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

இலக்கு

# ஈழத்தமிழரின் இறைமையையும் இருப்பையும் சங்குச் சின்னத்துக்கு வாக்களித்துப் பாதுகாருங்கள்

சிறிலங்கா ஈழத்தமிழரை இனவழிப்பு செய்வதற்குச் செய்த-செய்கிற அனைத்துலகச் சட்டங்களுக்கு எதிரான மனிதாயத்தைச் சிதைக்கும் அத்தனை செயற்பாடுகளையும் ஐக்கிய நாடுகள் சபை அதன் "இறைமையையும் தேசிய ஒருமைப்பாட்டையும் பாதுகாக்கும் செயல்" எனக் கண்டும் காணமல் இருந்ததும் - இருப்பதும், இன்று அதுவே உலக அரசியலிலும் மக்களின் இறைமையையும் இருப்பையும் இனஅழிப்பால் இல்லாதொழிக்கும் அனைத்துலக பாதுகாப்புக்கும் அமைதிக்கும் தீங்கு விளைவிக்கும் அரசியல் முறைமையாகப் பரிணாமம் அடைந்து இஸ்ரேயலால் மீளவும் பலஸ்தீன மண்ணில் நடைமுறைப்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கிறது. உக்ரேன் ரஸ்ய யுத்தத்திலும் எதிரொலித்துக் கொண்டிருக்கிறது.

இதன் உச்சமாக சிறிலங்காவுக்கு ஈழத்தமிழர்களின் வீட்டுக்குள் யுத்தத்தைக் கொண்டு வர எந்த இஸ்ரேலிய புலனாய்வு முகவர்கள் பயிற்சிகள் கொடுத்தார்களோ அதே இஸ்ரேயலிய புலனாய்வு முகவர்கள் தங்கள் எல்லை கடந்து லெபனானிலும் சிரியாவிலும் மக்கள் தொடர்புச்சாதனங்களான 'பேஜர்களையும் வாக்கிடோக்கிகளையும்' வெடிக்கச் செய்து மக்களின் வாழ்வாதாரக் கருவிகளையே அவர்களை இனப்படுகொலை செய்வதற்கான கருவியாக மாற்றியுள்ளமை இவ்வார உலக நிகழ்வாக உள்ளது.

இந்நேரத்தில் உலகின் ஒவ்வொரு போராடும் தேச இனங்களும் தங்கள் இறைமையையும் இருப்பையும் தாங்களே உறுதிப்படுத்துவதன் மூலமே தங்கள் மண்ணையும் மக்களையும் பாதுகாக்க வேண்டிய அனைத்துலகச் சூழ்நிலை தோன்றியுள்ளது. இந்த அனைத்துலக மாற்றத்தை ஈழத்தமிழர் உள்வாங்கியதன் நடைமுறைச் செயற்பாடே "பொதுவேட்பாளர்" மூலம் ஈழத்தமிழர்கள் இறைமையும் ஒருமைப்பாடும் உடைய தேசமக்கள் என்பதை உலகுக்கு மீளுறுதி செய்து ஈழத்தமிழர்களின் இறைமையயும் இருப்பையும் பாதுகாக்க முயலும் "நமக்கு நாமே வாக்களிக்கும்" உலகின் புதிய சனநாயகப் போராட்டம்.

இந்த பொதுவேட்பாளர் தேர்தல் வெற்றியை அல்ல இனத்தின் இருப்பை வாக்குப்பலத்தின் மூலம் சனநாயக வழியில் வெளிப்படுத்துவதையே மையமாகக் கொண்டது. ஈழத்தமிழினத்தின் வேட்பாளராக அல்ல சின்னமாகவே சங்குச் சின்னத்தில் தன்னைப் பொதுவேட்பாளராக ஈழத்தமிழினத்தின் சார்பாக வெளிப்படுத்தியுள்ள முன்னாள் மட்டக்களப்புப் பாராளுமன்ற உறுப்பினர் பா. அரியநேத்திரன் அவர்கள் பொலிகண்டி முதல் பொத்துவில் வரை ஈழத்தமிழர் தாயகம் எங்கும் கடந்த மாதம் 23 முதல் மூன்று கிழமைகள் சூறாவளிப் பயணம் செய்து ஈழத்தமிழர்களைத் தேசமாக எழுந்து செப்டெம்பர் 21 இல் உலகுக்கு முன் வாக்குகள் மூலம் 1977ம் ஆண்டின் சுயநிர்ணயத்தை மீளுறுதி செய்ய அழைத்துள்ளார்.

78ம் ஆண்டின் இலங்கை சோசலிச சனநாயகக் குடியரசு அரசிலமைப்பால் உருவாக்கப்பட்ட நிறைவேற்று அதிகாரமுள்ள சிறிலங்காவின் அரசுத் தலைவர் தேர்தல் ஈழத்தமிழர்களுக்கு உரியதல்ல. பிரித்தானிய காலனித்துவம் உருவாக்கிய சிங்களப் பெரும்பான்மை பாராளுமன்ற ஒற்றையாட்சியின் அடிப்படையிலான எந்தத் தீர்வும் ஈழத்தமிழர்களின் அரசியல் விருப்பு எதனையும் திருப்தி செய்யாது. தீர்க்கப்படாத காலனித்துவப் பிரச்சினையாகக் கடந்த 76 ஆண்டுகளாக உள்ள ஈழத்தமிழரின் தேசியப் பிரச்சினை அனைத்துலகச் சட்டங்களால் ஐக்கிய நாடுகள் சபையால் தீர்க்கப்பட வேண்டிய அனைத்துலகப் பிரச்சினை என்பதால் அனைத்துலகால் ஈழத்தமிழரின் இறைமயும் தன்னாட்சியும் ஏற்கப்பட்ட நிலையில்தான் எங்களுக்கான சனநாயகப் பங்களிப்பைச் செலுத்தி எங்களுடைய உள்ளக தன்னாட்சியின் அடிப்படையில் எமது தன்னாட்சியைப் பயன்படுத்தி வாழ முடியும் என்பதே பொதுவேட்பாளரின் தேர்தல் விளக்கத் திரட்டாக உள்ளது.


இந்த காலனித்துவத்தால் தன்னாட்சி உரிமையைப் பயன்படுத்த இயலாத மக்களாக ஈழத்தமிழர் உள்ளனரென அவர்கள் தன்னாட்சி உரிமையினைப் பயன்படுத்தி வாழ்வதற்கான நிலை உருவாகும் வரை ஐக்கிய நாடுகள் சபையின் சிறப்புப் பிரதிநிதி நியமிக்கப்பட வேண்டுமென யாழ்ப்பாணப் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரக்குமார் பொன்னம்பலம் அவர்கள்தான் இவ்வாண்டின் தொடக்கத்தில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் அமர்வில் வேண்டுகோள் விடுத்திருந்தார். இவரின் வேண்டுகோளைச் செயற்பாட்டுக்கு கொண்டுவரத் தக்க வகையில்தான் 1977 ம் ஆண்டு சிறிலங்காவின் தேசிய சபைக்கான பொதுத் தேர்தலை ஈழத்தமிழர்கள் தங்களின் தாயக தேசிய தன்னாட்சிப் பிரகடனமான 1976ம் ஆண்டின் வட்டுக்கோட்டைத் தீர்மானத்துக்கான குடியொப்பமாக மாற்றியது போலவே சிறிலங்காவின் 9வது நிறைவேற்று அதிகாரமுள்ள அரசுத்தலைவர் தேர்தலை அந்த நோக்கை நிராகரித்து ஈழத்தமிழரின் இறைமையையும் தன்னாட்சி உரிமையையும் மீளுறுதி செய்யும் குடியொப்பமாக பொதுவேட்பாளர் போட்டியிடல் மாற்றியுள்ளது. ஆனால் மாண்பமை கஜேந்திரக்குமார் பொன்னம்பலம் அவர்கள் 22.05. 1972 முதல் அரசற்ற தேசஇனமாகவுள்ள ஈழத்தமிழர் சிறிலங்காப் பாராளுமன்றத் தேர்தல்களைப் புறக்கணிக்கும் மரபுநிலைப் போராட்டத்தையே இன்று தனதுநிலைப்பாடாகவும் அறிவித்துள்ளார். இந்தத் தேர்தல் புறக்கணிப்புக்களின் பொழுது அளிக்கப்படாத வாக்குகள் இந்த அரசியல் கொள்கைக்காகத்தான் அளிக்கப்படாது விடப்பட்டது என்பது அரூபநிலையாக இருப்பதால் சான்றாதாரமாக அதனை ஏற்று அனைத்துலகச் சட்டங்களின் அடிப்படையில் ஈழத்தமிழர்களின் வெளியக தன்னாட்சி உரிமையின் அடிப்படையில் தங்களால் எதுவும் செய்ய இயலாதுள்ளது என்பது அனைத்துலக அமைப்புக்களின் நாடுகளின் தெளிவான பதிலாக உள்ளது. இதனால் ஈழத்தமிழரின் தேர்தல் புறக்கணிப்பை உருவநிலை வேட்பாளர் ஒருவரை இதுவே எமது கொள்கையென வாக்களிப்புக்கு நிறுத்தி சான்றாதாரப்படுத்த வேண்டிய சமகாலத் தேவையின் வெளிப்பாடே பொதுவேட்பாளர் போட்டியிட வேணடியதாகியுள்ளது. எனவே சங்குச் சின்னம் இன்று ஈழத்தமிழர்களின் சமகால அரசியல் நிலைப்பாட்டை உலகுக்கு வெளிப்படுத்தும் ஈழத்தமிழரின் குரலாக உள்ளது. பொதுவேட்பாளரின் பணி (Mission) என்ன என்பதும் அதன் காட்சிநிலை (Vision) என்பதும் ஈழத்தமிழரை இறைமையும் ஒருமைப்பாடும் உள்ள தனியான தேச இனம் என்று உலகுக்கும் சிங்களப் பெரும்பான்மையினர்க்கும் மீளுறுதி செய்து 1977ம் ஆண்டின் மக்களாணையை சனநாயக வழிகளில் நடைமுறைப்படுத்தல் என்பதும் தெளிவாக்கப்பட்டுள்ளது. இனி மக்கள் இதற்கு வாக்குப் பலத்தால் கையொப்பப்பலம் அளித்தல் ( Signature) என்னும் அரசியல் நடவடிக்கையே 21.09.2024 இல் தமிழர் தாயகப் பகுதிகளில் நடைபெற வேண்டியுள்ளது. இது சிறிலங்காவின் நோக்கை நிறைவேற்ற வாக்களிக்கும் தேர்தல் அல்ல ஈழத்தமிழரின் நோக்கை வெளிப்படுத்த வாக்களிக்கும் தேர்தல். இதனைச் சரிவர உணர்ந்து ஈழத்தமிழர்கள் அனைவரும் தங்கள் அனைத்து வேறுபாடுகளையும் கடந்து "நாம் நமக்காக வாக்களிக்க" வேண்டிய வரலாற்றுக்கடமையைச் செய்ய இலக்கு அழைக்கிறது.

கத்தோலிக்க சமயத்தின் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள் அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் குறித்து ஊடகங்களுக்கு அளித்த செவ்வியில் "வாக்களிக்காது விடுவது குற்றச் செயல். ஆனால் போட்டியிடும் கண்ணியத்துக்குரியவர் தனது குடிவரவுக் கொள்கைகளால் அகதிகள்- பிறநாட்டவர் - பெண்தலைமைத்துவக் குடும்பங்கள் என்பவற்றை இல்லாதொழிக்கும் கொலைகாரர்-போட்டியிடும் மதிப்புக்குரிய பெண் வேட்பாளரோ கருக்கொலைக்கு ஆதரவளிக்கும் அவரது கொள்கையால் கொலைகாரர். ஆகவே குறைந்த அளவிலான தீமையை உடையவர் யாரென அவர்களுக்கு வாக்களிப்பதே சிறந்தது" என்ற கருத்தை வெளியிட்டிருந்தார். இது சமகாலத்தில் வாக்களியாத புறக்கணிப்புநிலை அனைத்துலக நிலையில் குற்றச் செயலாகவே கருதப்படுகிறது என்பதைத் தெளிவாக்கியுள்ளது. இதனால் புறக்கணிப்பின் நோக்கை எந்தவொரு நாடோ அமைப்போ கவனத்தில் எடுப்பதில்லை. இதனை ஈழத்தமிழரின் அவர்கள் அரசற்ற தேச இனமாக்கப்பட்ட 22.05. 1972 முதலாக இன்று வரையான தேர்தல் புறக்கணிப்புப் போராட்டங்களும் எந்த உரிய பலனையும் அளிக்காததும் நிரூபித்துள்ளது. அத்துடன் முன்னாள் நீதியரசர் விக்னேஸ்வரன் அவர்கள் 100000 பேர் வாக்களித்தால் 50000 உம் 1 என்ற அடிப்படையில் ஜனாதிபதியாவதற்குரிய வாக்கு அமையும் ஆனால் புறக்கணிப்பால் 60000 பேர் வாக்களித்தால் 30000 உம் 1உம் என்று வெற்றிச் சந்தர்ப்பம் குறைந்த வாக்குகளுடனேயே அமைவதால் புறக்கணிப்புச் சிங்களக்கட்சிகளுக்குச் சாதகமாகவே முடியும் என்கின்ற எச்சரிப்பை விடுத்துள்ளார். இந்நிலையில் போட்டியிட்டு மக்கள் வாக்கைப் பெற்று எதிர்ப்பை வெளிப்படுத்தும் பொதுவேட்பாளர் எல்லாவிதத்திலும் காலத்தின் தேவையாகிறது.

எனவே சிறிலங்கா தனது பொருளாதார வங்குரோத்து நிலைக்கும் அரகலிய மக்கள் எழுச்சிக்கும் உரிய மாற்றத்தை ஏற்படுத்த வல்ல தேர்தல் என இந்த ஜனாதிபதி தேர்தலை முன்னிலைப்படுத்தியுள்ளதால் சிங்கள வேட்பாளர்களில் முன்னணியில் இருக்கும் நால்வரும் ஈழத்தமிழர்களைத் தங்கள் சிங்கள பௌத்த நாட்டில் வாழும் சமுகமாகவே உறுதிப்படுத்தி இனவாதம் பேசினால் இனப்பிரச்சினை உள்ளதாகிவிடும் என வாயால் பேசாது தங்கள் தேர்தல் அறிக்கைகளில் சிங்கள பௌத்த உயர் நிலையை உறுதிப்படுத்தி ஈழத்தமிழரின் இறைமை நீக்கத்தையும் ஈழத்தமிழ்த் தேசிய நீக்கத்தையும் வெற்றிகரமாக முன்னெடுத்துள்ளனர். ஆதலால் சிங்களவரிடை தேர்தல் பரப்புரையில் இனவாதம் குறைவடைந்துள்ளது என்ற கருத்து முற்றிலும் தவறானது. இந்நிலையில் பொதுவேட்பாளருக்குச் சங்குச் சின்னத்தில் வாக்களித்து ஈழத்தமிழரின் இறைமையையும் இருப்பையும் பாதுகாருங்கள் என்பதே இலக்கின் வேண்டுகோளாக உள்ளது. அதே வேளை பொதுவேட்பாளருக்கு ஈழத்தமிழர்களிடை பரப்புரை பல்வேறு காரணங்களால் ஆழமாக்கப்படாத நிலை மிகப்பெரிய வாக்குப்பலத்தை அளிக்காது விட்டாலும் இந்தத் தொடக்கம் இனிவரும் தேர்தல்களில் எல்லாம் ஈழத்தமிழர் பொதுவெளியில் ஒன்று பட்டு நின்று தங்கள் கொள்கைகளை கோட்பாடுகளை வெளிப்படுத்தும் புதிய சகாப்தத்தைத் தோற்றுவித்துள்ளது என்பது இலக்கின் பார்வையாக உள்ளது. ஆதலால் வெற்றி-வெற்றி என்ற நிலையில் என்றுமுள்ள பொதுவேட்பாளருக்கு மக்கள் சங்குச் சின்னத்தில் அளிக்கும் வாக்குப்பலம் ஈழத்தமிழர்களின் இறைமையின் மீளுறுதிப்பாட்டுக்கும் இருப்பின் அடையாள வெளிப்படுத்தலுக்கும் ஈழத்தமிழரை ஒரு தேசமாக எழ வைக்கும் என்பதில் இலக்குக்கு எள்ளவும் சந்தேகமில்லை. இறைமையுள்ள ஈழத்தமிழர்களுக்கு அதனை மீளுறுதி செய்ய ஒற்றுமையும் ஒருமைப்பாடும் கொண்ட மக்கள் போராட்டங்கள் வெடிக்க வேண்டும் என்பதை தியாகி திலீபனின் 37வது நினைவேந்தல் வாரத்தில் இடம்பெறும் இந்த "நமக்காக நாமே வாக்களிக்கும் சனநாயகப் போராட்டம்" ஈழத்தமிழர்களுக்கு மீள்நினைவுறுத்தட்டும் என்பது இலக்கின் எண்ணமாகவுள்ளது.

**ஆசிரியர்**

# பார்த்தீபப் பல்லாண்டு



மெலிந்த தேகம், மிடுக்கான நன்னடை, கலைந்த
தலைமுடி,
கனிந்த பார்வையொடு கள்ளமில்லாச் சிரிப்பு,
அணிந்த ஒருவனைக் கண்டுவிட உளம்
கரைந்து, நிறைந்து கிடந்தது நல்லூரான்
முற்றம்...

அழிந்து போய்விடும், இனி அடங்கிப்
போய்விடும் நலிந்து போய்விடும் நாதியற்றிடும்
என நினைந்து மயங்கிக்கிடந்த மாயை
தகர்ந்திடத்
தீலீபம் வகுத்த வழிகாண், வல்லமை கொண்டே
வாழும் வகைகாண்...

அணிந்து நின்றதோ நெஞ்சுறுதி, அவனுருகக்
கரைந்து கிடந்தது நல்லூர் வீதி, பணிந்துபோகா
மறவரின் விதி, பயணங்கள் உரமேறத் துணிந்து
கொள்வதே தேச நியதி...

வளர்ந்து வளர்ந்து ஒளிர்ந்த திலீபமதில்
முகிழ்ந்தது ஒரு தேசம், படர்ந்த ஒளியிற்
பன்முகங்கொண்டது...
தளர்ந்து போகா உறுதியிற் திடங்கொண்டு
எழுந்துநின்று பல்லொளி பெருகிடப்
பல்லாண்டு கூறுதுமே!

**-காந்தள்-**



**சுயநிறைவான தன்னில்தானே தங்கிநிற்கும் பொருளாதார வாழ்வுடைய சமூகமாக எமது சமூகம் உருவாகவேண்டும் என்பதே, எனது விருப்பம்: மக்கள் தம்மைத்தாமே ஆளும் உரிமையுடைய சனநாயக ஆட்சி முறையையே நான் விரும்புகின்றேன். இந்தப் புதிய சமூகத்தில், உழைக்கும் மக்கள் மத்தியில் பொருளாதார சமத்துவம் நிலவ வேண்டும்.**

**தமிழீழத் தேசியத் தலைவர்**
**மேதகு** *திரு.வே.பிரபாகரன்* **அவர்கள்.**

# தயாராகியுள்ள தேர்தல் களம்





# தமிழ் மக்களின் தீர்ப்பு என்ன?

அகிலன்

ஜனாதிபதி தேர்தலுக்கான பரப்புரைகள் - பேரணிகள் புதன்கிழமை நள்ளிரவுடன் முடிவுக்கு வந்துள்ளன. சனிக்கிழமை புதிய ஜனாதிபதியை தெரிவு செய்வதற்கான தேர்தல் நடைபெற இருக்கின்றது. 38 வேட்பாளர்கள் களத்தில் இருந்தாலும், போட்டி மூன்று பேருக்கு இடையில் தான். தமிழ் பொது வேட்பாளர் ஒருவ ரும் களமிறக்கப்பட்டு இருப்பதால் தமிழ் வாக்குகளில் எத்தனை வீதம் தமக்கு கிடைக்கும் என்பது பிரதான வேட்பாளர் கள் மூவரினதும் பிரச்சினை.

தமிழ் வாக்குகள் தமக்கு இல்லை யென்றால், தமது வெற்றியை உறுதிப் படுத்த முடியாது என்பதும் அவர்களுக்குத் தெரியும்.

சஜித் பிரேமதாசாவுக்கு தமது ஆதரவை வழங்குவது என்று தமிழரசு கட்சி இறுதி நேரத்தில் முடிவெடுத்திருக்கிறது. ஆனால், இந்த முடிவு தமிழ் வாக்குகளை எந்தளவுக்கு சஜித்துக்குப் பெற்றுக்கொடுக்கும் என்பது முக்கியமான கேள்வி. சுமந்திரன் சொன்னதற்காக தமிழர்கள் சஜித்துக்கு வாக்களிப்பார்கள் என்று யாரும் நம்பவில்லை.

சுமந்திரனின் அதிரடியான முடிவு தமிழரசுக் கட்சிக்குள் பாரிய பிளவுகளை ஏற்படுத்தி இருக்கின்றது. அதேவேளை இந்த தீர்மானத்தை எடுப்பதில் பிரதான பங்கை வகித்திருந்த சுமந்திரன் கூட சஜித்தின் வெற்றியில் எந்த அளவுக்கு நம்பிக்கை வைத்திருப்பார் என்பதும் கேள்விக்குறியாகத்தான் இருக்கிறது.

ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில், தமிழ் மக்களின் அதிக அளவு ஆதரவு ரணில் விக்கிரமசிங்காவுக்குத் தான் இருக்கின்றது என்று சுமந்திரன் தெரிவித்திருக்கின்றார். அதேவேளையில் அநுர குமார திசநாயக்க வெற்றி பெறுவதுதான் தன்னுடைய விருப்பம் என்றும் சுமந்திரன் கூறியிருக்கின்றார்.

ஆனால், இந்த இரண்டு பேரையும் தவிர மற்றொருவருக்கு ஆதரவளிக்க வேண்டும் என்ற நிலைப்பாட்டை தமிழரசு கட்சி எடுப்பதில் முனைப்பாக இருந்து செயற்பட்டவரும் இதே சுமந்திரன் தான். அந்த வகையில் சுமந்திரன் இந்த முடிவை எடுப்பதற்கு காரணமாக என்ன இருந்துள்ளது என்ற கேள்வி பலமாக எழுப்பப் படுகின்றது.

தமிழரசு கட்சிக்குள் இருந்து கூட. இந்த முடிவு தொடர்பில் கேள்விகள் எழுப்பப்பட்டது. அதற்கான பதிலை சொல்லக்கூடிய நிலைமையில் சுமந்திரனோ தமிழரசு கட்சியோ இல்லை என்பது தான் உண்மை. தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா கூட, சஜித்தை ஆதரிப்பது என்ற கட்சியின் முடிவை ஊடகவியலாளர்களுக்கு அறிவித்துவிட்டு, சில மணி நேரத்திலேயே தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரனுக்கு தான் தன்னுடைய ஆதரவு என்றும் கூறியிருக்கின்றார். அரியநேத்திரனுக்கு ஆதரவான கூட்டத்திலும் பங்கேற்று உரையாற்றி இருக்கின்றார்.

தமிழரசுக் கட்சியின் தெரிவு செய்யப்பட்ட தலைவர் சிவஞானம் சிறிதரன் அந்த முடிவை ஏற்கனவே பகிரங்கமாக அறிவித்துவிட்டார். அவரும் பொது வேட்பாளருக்கு ஆதரவாக மேடை ஏறியுள்ளார். மட்டக்களப்பிலும் தமிழரசுக் கட்சியின் முன்னாள் எம்.பி.க்கள் பலர் பொது வேட்பாளருக்காக களமிறங்கியுள்ளார்கள்.

ஆக, தமிழரசுக் கட்சியின் சுமந்திரன் தவிர கணிசமான ஒரு பிரிவினர் பொது வேட்பாளர் ஆதரவு என்ற நிலைப்பாட்டில்தான் இருக்கின்றார்கள்.

இம்முறை தேர்தலில் பிரதானமான வேட்பாளராக கருதப்படும் மூவருமே ஏற்கனவே அரசியல் அமைப்பில் இருக்கின்ற 13 வது திருத்தத்துக்கு அப்பால் செல்வதற்கு தயாராக இல்லை. பதின்மூன்றாவது திருத்தம் என்பது மாகாணங்களுக்கு வரையறுக்கப்பட்ட சில அதிகாரங்களை வழங்குவதற்கான ஒரு நிர்வாக ஏற்பாடு மட்டுமே. இனநெருக்கடிக்கான அரசியல் தீர்வை வழங்கக்கூடிய ஒரு முறையாக அது இல்லை. தமிழ் தரப்புகள் 13 என்பதை நிராகரிப்பதற்கு அதுதான் காரணம்.

தற்போதைய நிலைமையில் சஜித் பிரேமதாச கூட 13 என்பதை தான் தீர்வாக தன்னுடைய தேர்தல் விஞ்ஞாபனத்தில் வைத்திருக்கின்றார். சமஷ்டி அல்லது அதற்கு நிகரான தீர்வு ஒன்றை தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் முன்வைப்பவர்களுக்குத்தான் தமிழரசு கட்சியின் ஆதரவு கிடைக்கும் என்று சொல்லிக்கொண்டிருந்த சுமந்திரன், எதற்காக அவசரமாகச் சென்று சஜித் பிரேமதாசவிற்கு ஆதரவு என்ற நிலைப்பாட்டை எடுத்தார் என்பது இன்னும் மர்மமாகவே இருக்கிறது.

ரணில் விக்கிரமசிங்க, ‘அரகலய’ போராட்டத்தை தொடர்ந்து ஜனாதிபதியாக பதவியேற்ற போது, நாடாளுமன்றத்தில் ஏனைய கட்சிகளை பார்த்து, “13 ஐ வழங்க நான் தயார்! அதனை ஏற்க நீங்கள் தயாரா?” என்று ஒரு கேள்வியை எழுப்பி யிருந்தார். அனைத்து தரப்பினருமே அதனை ஏற்றுக் கொள்வதற்கு தாங்கள் தயாராக இருப்பதாக கூறியிருந்தார்கள்.

ஆனால் கடந்த இரண்டரை வருட காலத்தில் அவர் செயல் படுத்தவில்லை. ஜனாதிபதி என்ற முறையில் அவருக்கு இருக்க கூடிய நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி மிகவும் இலகுவான முறையில் அதனை அவர் நடைமுறைப்படுத்தியிருக்க முடியும். அதனை அவர் செய்யவில்லை. மட்டக்களப்பு மாவட்டத்தில் பொருளாதாரத்துக்கு முதுகெலும்பாக இருக்கின்ற பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரவைப் பிரச்சனைக்கு கூட அவரால் ஒரு தீர்வு வழங்க முடியவில்லை. ஜனாதிபதி என்ற முறையில் அவரது உத்தரவு மட்டுமின்றி, நீதிமன்றத்தின் தீர்ப்பு கூட உதாசீனம் செய்யப்பட்டது. ஜனாதிபதி உறுதியாக இருந்திருந்தால் அதனைச் செய்திருக்கலாம். நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளிலும் கவனத்தைச் செலுத்தும் சஜித், அநுர கூட அதில் அக்கறை காட்டவில்லை. மேய்ச்சல் தரைப் பிரச்சினையால் பாதிக்கப்படுபவர்கள் தமிழர்கள் என்பதாலா?

இந்த நிலையில் அதிகாரங்கள் எதுவும் இல்லாத ஒரு மாகாண சபை அமைத்து அதன் மூலமாக தமிழ் மக்களுடைய பிரச்சினைக்கு தீர்வை காண முடியும் என்பது சாத்தியமானதா?

ஜேவிபி என்ற அமைப்புதான் இப்போது தேசிய மக்கள் சக்தி என்ற பெயரில் ஒரு புதிய வேடத்துடன் மக்களின் முன்பாக தோன்றியிருக்கின்றது. அநுர குமார திசாநாயக்க அதன் சார்பாக போட்டியிடுகின்றார். தென் பகுதியில் உருவாக்கிய கிளர்ச்சியை தொடர்ந்து அந்த அமைப்பு மக்கள் மத்தியில் பெருமளவு செல்வாக்கை பெற்றிருக்கின்றது என்பது உண்மைதான். குறிப்பாக சிங்கள இளைஞர்கள் மத்தியில் அவர்களுக்கான ஆதரவு பலமாக இருப்பதாக மதிப்பீடுகள் தெரிவிக்கின்றன. ஆனால், ஜனாதிபதியாக வருவதற்கு தேவையான 50% வாக்குகளை அவர்களால் பெற்றுக் கொள்ள முடியுமா என்பது முக்கியமான கேள்வி!

இனநெருக்கடிக்கும் அவர்களிடம்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



# பொது வேட்பாளர்என்ற இராஜதந்திரம் ஏற்படுத்தப்போகும் தாக்கங்கள் என்ன?

ஆய்வாளர் செல்வின் மரியாம்பிள்ளை



**தேர்தல் கள நிலைமைகள் எவ்வாறு இருக்கின்றன. தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இந்த தேர்தலில் அவர்கள் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்த போகின்றார்கள் என்பது தொடர்பாக பிரபல அரசியல் பொருளாதார ஆய்வாளரும் சமூக செயற்பாட்டாளருமான செல்வின் அவர்கள் அனைத்துலக உயிரோடை தமிழ் வானொலியின் தாயகக்களம் நிகழ்ச்சிக்கு வழங்கிய நேர்காணலை 'இலக்கு' வாசகர்களுக்காக இங்கே தருகின்றோம். இந்த நேர்காணலை காணொளியில் YouTube இல் முழுமையாகப் பார்ப்பதற்கு இங்குள்ள QR Code இனை ஸ்கான் (Scan) செய்யவும்.**

**ஜனாதிபதி தேர்தல் தமிழ் மக்களை பொறுத்த வரையில் எந்த அளவுக்கு முக்கியத்துவம் பெறுகின்றது?**

இந்த ஜனாதிபதி தேர்தல் முக்கியத்துவம் என்பதை விட இதை நாங்கள் கையாளுவதற்காக தெரிவு செய்த அணுகுமுறை தான் முக்கியம். இலங்கையில் ஒன்பது ஜனாதிபதி தேர்தல்கள் நடந்திருக்கின்றன. யாரோ ஒரு ஜனாதிபதிக்கு அன்றைய அரசியல் தலைமைகள் சொல்லுகின்றபடி வாக்கு போட்டிருக்கின்றோம். பின்பு அவர்களை நம்பி ஏமாந்து போயிருக்கிறோம். இம்முறை அவை எல்லாவற்றையும் மாற்றி நாங்கள் ஒரு புதிய அணுகுமுறை ஒன்றை தேர்ந்தெடுத்திருக்கின்றோம்.

அதாவது இது ஒரு வகையில் அவர்களை பணிய வைப்பது என்பதை விட எங்களது மக்களுக்கு தன்னம்பிக்கை ஊட்டி ஈழத் தமிழ் மக்களினுடைய விடுதலைக்கான செல்நெறியில் எப்படி ஒரு புதிய மாற்று அணுகுமுறையை கண்டறியலாம் என்பதற்கான ஒரு விடயமாக இது மாறியுள்ளது.

நாங்கள் எங்களுக்கென ஒரு பொது வேட்பாளர் ஒருவரை நியமிப்பதன் மூலம் அவருக்கு எங்கள் வாக்குகளை செலுத்துகின்ற ஒரு விடயம் இம்முறை இங்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தமிழ் மக்கள் மத்தியில் அரசியல் சம்பந்தமான ஒரு பரந்த கலந்துரையாடல் ஒன்றை உருவாக்கியுள்ளது. தமிழ் மக்கள் எல்லா மட்டங்களிலும் இப்பொழுது 'ஏன் இந்த பொது வேட்பாளர், நாங்கள் பொது வேட்பாளருக்கு வாக்கு போடத்தான் வேண்டுமா, ஏனைய வேட் பாளருக்கு போடக்கூடாதா என பேசத்துவங்கி இருக்கின்றார்கள். இது கடந்த ஒரு 30, 35 வருடங்களாக நாங்கள் காத்திருந்த ஒரு அரசியல் பேசுகின்ற உரைநிலையிலிருந்து வெளிவந்திருக்கின்றது.

ஒரு ஜனநாயக அரசியல் பாரம்பரியத்திற்கு இது மிக முக்கியமானது. ஆனால் இதை புரிந்து கொள்ள மறுக்கின்ற தமிழ் தரப்புகளும் உள்ளன. இன்னும் ஒரு தலைப்பினர் ஒரு ஜனாதிபதி வேட்பாளருக்கு வாக்களிப்பதன் மூலம் அவர்களுடன் பேரம் பேசி நாங்கள் எங்களுக்கு ஏதாவது விடயத்தை அடைந்து கொள்ளலாம் என்று இருக்கின்றார்கள். ஆனாலும் இந்த பொது வேட்பாளருக்கான பலம் தமிழ் மக்கள் மத்தியில் விரிந்திருக்கின்றது.

கிராமங்கள் மத்தியில் எங்களுக்கு சவால் இருக்கிறது. 'தமிழ் தேசியம் பற்றி நீங்கள் பேசுகிறீர்கள், பொது வேட்பாளரை நியமிக்கின்றீர்கள். எங்களுடைய கிராம தேசியம் அல்லது எங்களுடைய வாழ்வாதாரம் வாழ்க்கை பிரச்சனைகள், சமூக ஏற்றத்தாழ்வுகள் இவைகளை எல்லாம் கையாளக்கூடியதான தேசியமாக புதிய தமிழ் தேசியம் மாற்றமடையுமா?" என்ற ஒரு கேள்வியை அவர்கள் வைத்திருக்கின்றார்கள்.

அவ்வாறு ஒரு வகையான சூட்டை பிரசாரக் களம் பெற்றிருக்கின்றது. அதே வேளையில் தென்னிலங்கையில் மிகுந்த தடுமாற்றமான செய்திகள் தான் வந்து கொண்டிருக்கிறது.

ஒரு வேட்பாளருடைய தரப்பு இன்னும் ஒரு வேட்பாளரை ஆதரிக்கப் போகிறேன் என்று சொன்னாலும் ஆச்சரியப்படுவதற்கு இல்லை என்ற அளவுக்கு தென்னிலங்கையின் நிலைமைகள் இருக்கின்றன. தென்னிலங்கையில் குறிப்பாக மகிந்த ராஜபக்ச தரப்பினர் அவர்கள் தங்களை பாதுகாப்பதற்காக எந்த தரப்பு வரவேண்டும் என்பதில் மிகவும் கவனமாக இருக்கின்றார்கள்.

ஏனைய இரண்டு தரப்பிலும் முதன்மையாக இருக்கின்ற அனுரகுமார திசாநாயக்க மற்றும் சஜித் அவர்களில் கூட இப்பொழுது அணி மாற்றங் கள் நடந்து கொண்டிருக்கின்றன. ரணிலை மூன்றாவதாக தள்ளிவிட்டு சஜித்தும் அனுரகுமாரவும் போட்டிக்கு நிற்பது, இல்லை சஜித்தை பின்னுக்கு தள்ளிவிட்டு அனுரகுமாரவும் ரணிலும் போட்டிக்கு நிற்பது போன்ற தோற்றம் தென்னிலங்கையில் ஏற்பட்டுள்ளதாக செய்திகள் வெளி வருகின்றன.

என்னுடைய அணுகுமுறையில் சஜித் வரக்கூடாது என்பதில் கணிசமான தரப்பினர் கடுமையாக வேலை செய்வது போன்று உணர்கின்றேன். சஜித் வரக்கூடாது என்பதில் அரசியல் பின்னணி மட்டும்தானா அல்லது சமூக பின்னணி இருக்கா என்பதும் எனக்கு புரியவில்லை. அதே வேளையில் சில வேளைகளில் பக்கத்து பிராந்திய வல்லரசு சஜித்தை ஆதரிக்கலாம் என்ற ஒரு நிலை. இல்லையென்றால் சஜித் வந்து தமிழ் மக்களுக்கு ஏதாவது செய்யலாம் என்ற வாக்குறுதி அப்படியான விடயங்கள் கூட செல்வாக்கு செலுத்துகின்றதா என்ற கேள்வி இருக்கின்றது.

ஆனால் அனுரகுமார வரக்கூடாது என்பதில் கடந்த காலங்களில் அதிகாரத்தில் இருந்தவர்கள் எல்லோரும் மிக கவனமாக இருக்கின்றார்கள். இவ்வாறு தென்னிலங்கை ஒட்டுமொத்த குழப்பமாக இருக்கின்றது. எனவே இந்த குழப்பத்துக்குள் அறுவடை செய்யக்கூடிய எந்த விடயமும் தமிழ் மக்களுக்கு இல்லை. தமிழ் மக்கள் தங்களுக்கான ஒரு திரட்சியான ஆதரவை கட்டி எழுப்புவதன் மூலமும் தங்கள் மத்தியில் ஒரு ஆரோக்கியமான அரசியல் கலந்துரையாடலை முன்னெடுப்பதன் மூலமும் எதிர்கால செல்நெறியை வகுப்பதற்கான ஒரு தந்திரோபாய பாதையில் பிரவேசிக்கின்றார்கள் என்பதுதான் நிதர்சனம்

**வடக்கு கிழக்கில் தமிழ் பொது வேட்பாளருக்கான ஆதரவு மக்கள் மத்தியிலே எவ்வாறு உள்ளது?**

மக்கள் மத்தியில் ஆதரவு என்றால் 60 ,40 வீதம் என்று தான் சொல்ல முடியும். ஏனென் றால் மக்களைத் திரட்டுவது என்பது மிகவும் சவாலாக மாறியுள்ளது. குறிப்பாக இந்த கூட்டங்களுக்கு வருவதற்கு மத்தியதர வர்க்கம் ஆர்வம் கொள்வதில்லை. மத்திய வர்க்கத்தின் கீழ் மட்டத்தில் உள்ளவர்கள் அதற்கு குறைந்த மக்கள் தான் வருகின்றார்கள், அல்லது திரட்டப்படுகின்றார்கள். அதிலும் குறிப்பாக அவர்களுக்கான ஊக்குவிப்புகள் கொடுத்து போக்குவரத்து உணவு, அதைவிட மேலதிகமாக அவர்கள் திரும்பிப் போகும்போது அவர்களுக்கு ஏதாவது ஒரு நிதி கொடுத்து மக்களை அழைத்து வந்து கூட்டத்தைச் சேர்க்கின்ற ஒரு கலாச்சாரம் இலங்கையில் மிகவும் ஆழமாக வியாபித்துள்ளது.

அத்தகைய நிலைமையில் தமிழ் பொது வேட்பாளருக்கு மக்களை அழைக்கும் போது, கொள்கை ரீதியாக அல்லது இதில் மிகத் தெளிவு கொண்ட மக்கள் தாங்களாகவே வருகின்றார்கள். அல்லது ஆர்வம் உள்ளவர்கள் போக்குவரத்து வாய்ப்பு கிடைக்கும் என்றுசொன்னால் அதை பயன்படுத்தி வருகின்றார்கள். செல்வாக்குள்ள பண பலம் மிக்க அரசியல் கட்சிகள் செய்வது போன்று தமிழ் பொது வேட்பாளருக்கான அணியினரால் மக்களுக்கு எதுவும் கையூட்டு கொடுத்துவிட முடியாது. நாங்கள் அந்த

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# ஒரு தேர்தலும் இரு தேசங்களும்

ஆர்த்தீகன்

இலங்கையின் அரச தலைவர் தேர்தல் பிரச்சாரங்கள் இறுதி வாரம் மிகவும் கடுமையான மோதலாக மாற்றம் பெற்றிருந்தது. சிங்களக் கட்சிகளுக்கு இடையிலான பிரச்சார மற்றும் தேர்தல் வாக்குறுதிகள் என்ற போட்டி ஒருபுறம் இருக்க. தமிழர் தரப்புக்கும் சிங்களத் தரப்புக்கும் இடையிலான கடும் போட்டியாகவும் அது மாற்றம் பெற்றிருந்தது.



அதுமட்டுமல்லாது தமிழ் பொதுவேட்பாளர் என்று களமிறக்கிய அரியநேந்திரனை எதிர்த்து சிங்களக் கட்சிகள் பிரச்சாரம் செய்ததைவிட அல்லது சிங்களவர்கள் தாக்கியதைவிட இதுவரையில் தமிழ்த் தேசியம் என்று சாயம்பூசி உலாவிய ஒரு சில தமிழர்களின் தாக்குதல்கள் தான் அதிகம் என தளத்தில் இருந்து கிடைத்த தகவல்கள் தெரிவித்தபோது ஒரு தமிழனாக மனம் ஏதோ வேதனையை அனுபவித்தது.

தமிழ் பொதுவேட்பாளர் என்று தமிழர்கள் ஒருங்கிணைந்துவிடக் கூடாது என்பதில் சிங்களவர்களை விட ஒரு சில தமிழர்களும், இந்தியாவும் முனைப்பாக நின்றதை இந்த தேர்தல் ஈழத் தமிழர்களுக்கு தெளிவாக படம்போட்டு காண்பித்துள்ளது.

புலம்பெயர் தேசத்திலும் அதே நிலைமை தான் தேசியம் தமிழீழம் என்று பேசிய பல அமைப்புகள் மற்றும் தனிநபர்களின் சாயங்கள் அனைத்தும் வெளுத்துப்போன தேர்தலாக இந்த தேர்தல் அமைந்தது என்பது தமிழ் மக்களுக்கு மிகப்பெரும் அனுகூலமானது ஒன்றாகவே பார்க்கப்படுகின்றது.

தாயகத்தில் யாழ் பல்கலைக்கழகம் என்பது ஈழத்தமிழ் மக்களின் அறிவுத்திறனின் ஒரு இருப்பிடம். அந்த வளாகம் எமது அகிம்சைப் போரிலும் சரி, ஆயுதப்போரிலும் சரி தன்னிடம் உள்ள வளங்களை பயன்படுத்தி மிகப்பெரும் பங்களிப்பை எமது மக்களுக்கும் மண்ணுக்கும் அன்று வழங்கியிருந்தது. அதில் இருந்த எத்தனையே அற்புதமான மனிதர்கள் பேராசிரியர்கள், தமது அறிவையும், ஆற்றலையும் எமது போரட்டத்திற்கு வழங்கியிருந்தனர். அதில் ஒருவர் மாமனிதர் பேராசிரியர் துரைராஜா அவர்கள்.



ஆனால் இன்று அதே பல்கலைக்கழகத்தில் இருந்து 15 பேராசிரியர்கள் என்ற போர்வையில் சிங்கள தேசத்தின் வேட்பாளர் ஒருவரை மறைமுகமாக ஆதரித்து ஒரு குழுவினர் வெளியிட்ட அறிக்கை என்பது தமிழ் கல்விச் சமூகத்தை தலைகுனிய வைத்துள்ளதாகவே தோன்றுகின்றது. இருந்தபோதும், இத்தனை இடர்களையும் தாண்டி கடந்த புதன்கிழமை(18) கேணல் கிட்டு பூங்காவில் இடம்பெற்ற தமிழ்வேட்பாளரின் தேர்தல் கூட்டத்தில் மக்கள் அலையாக திரண்டது என்பது அவர்களின் அரசியல் மற்றும் விடுதலை உறுதியை பறைசாற்றி நிற்கின்றது.

போலியாக ஏமாற்றும் ஐக்கிய நாடுகள் சபையின் தீர்மானங்களை நம்பாது, போலியான வாக்குறுதிகளை வழங்கும் பிராந்திய நாடுகளை புறம்தள்ளி, தமக்கு ஒரு ஜனநாயகம், மற்றவர்களுக்கு ஒரு ஜனநாயகம் என உலகிற்கு பாடம் எடுக்கும் மேற்குலகத்தின் வலைக்குள் வீழாது. கடந்த 75 ஆண்டுகளாக போலியான வாக்குறுதிகளை வழங்கும் சிங்கள தேசத்தின் அரசியல்வாதிகளை புறம்தள்ளி தனது இனத்தின் ஒரு வேட்பாளருக்காக கிட்டுபூங்காவில் கால் பதித்த ஒவ்வொரு தமிழனும் எமது விடுதலையை வென்றெடுக்கும் அரசியல் போராளியாகவே இன்று தெரிகின்றான்.

இலங்கையில் இனப்பிரச்சனை இல்லை என்கிறது சிங்கள அரசு, சிங்கள வேட்பாளர்களும் இனப்பிரச்சனையில்லை என்றே கூவுகின்றனர். இந்தியாவும் அதனைத் தான் சொல்கின்றது. அதாவது இனப்பிரச்னை அல்லது இன இன முரண்பாடுகள் உள்ளதாக கூறினால் தானே அரசியல் தீர்வை முன்வைக்கவேண்டும். எனவே அவ்வாறு ஒன்று இல்லை என்று கூறிவிட்டால் அரசியல் தீர்வுக்கான பேச்சுக்கே இடமிருக்கப்போவதில்லை.



அது தான் சிங்களத்தின் திட்டம். ஆனால் நாம் அப்படியல்ல, இலங்கைக்குள் இன முரன்பாடுகள் உண்டு, இனப்பிரச்சனை உண்டு, நாம் தனியான தேசமாக இருந்தோம் என அடித்துக் கூறவேண்டியவர்கள். ஆனால் இந்த அடிப்படை அரசியல் அறிவுகூட இல்லாத சில தமிழர்கள் பொதுவேட்பாளர் மேடையில் இனவாதம் பேசப்பட்டதாக கொக்கரிப்பதைக் கண்டு நான் நினைக்கின்றேன் தியாக தீபம் திலீபனின் ஆத்மா கூட ஒருகணம் அதிர்ச்சியில் உறைந்துபோயிருக்கலாம்.

பொதுவேட்பாளர் என்று களமிறக்கப்பட்டது என்பது தற்போதைய உலக ஒழுங்கையும், உலகில் ஏற்படுகின்ற பூகோள அரசியல், பொருளாதார மற்றும் படைத்துறை மாற்றங்களையும் சரியாக கணிப்பிட்டு எடுக்கப்பட்ட தமிழர்களின் ஆயுதம்.



அது எத்தனை தடைகள் வந்தாலும் தொடரும், இது ஒரு ஆரம்பம் மட்டுமே, தமிழ் மக்களின் ஒருங்கிணைவு என்பதை எந்த சக்தியாலும் தடுக்க முடியாது என்பதை காலம் விரைவில் உணர்த்தும். ஏனெனில் தற்போதைய புறக்காரணிகள் அப்படியுள்ளன. நமது ஒருங்கிணைவு என்பது தற்போதைய உலக ஒழுங்கில் ஏதோவொரு பிராந்திய அல்லது உலக வல்லரசுக்கு அத்தியாவசியமானதாக மாற்றம்பெறும் நிலை தான் தற்போது தோன்றியுள்ளது.

இலங்கையின் தற்போதைய தேர்தல் என்பது இலங்கைக்கான தேர்தல் அல்ல, அது அமெரிக்கா, சீனா, இந்தியா ஆகிய நாடுகளின் பலப்பரீட்சை, தேர்தலில் வெற்றிபெறும் அரச தலைவர் கூட எத்தனை காலம் நீடிப்பார் என்பதை அவர்கள் தான் தீர்மானிப்பார்கள். தேர்தலுக்கு முன்னரே இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவர் ஜுலி சாங் இலங்கை அரச தலைவர் ரணில் விக்கிரமசிங்காவை பல தடவைகள் சந்தித்திருந்தார்.

அதுமட்டுமல்லாது அமெரிக்க இரஜதந்திரிகளும் அடிக்கடி இலங்கைக்கு பயணம் செய்திருந்தனர். அதேபோல இந்தியாவின் இராஜதந்திரிகள் பலர் இலங்கைக்கு பயணம் மேற்கொண்டதுடன், இறுதியாக இந்தியாவின் தேசிய பாதுகாப்பு ஆலோசகரும் அவசரமாக வந்து சென்றிருந்தார். அவர் சஜித் பிரேமதாசாவை ஆதரிப்பதாக தகவல். இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ். ஜெய்சங்கரும் சஜித்தை கடந்த ஜுன் மாதம் அவரின் இல்லத்தில் சந்தித்திருந்தார்.



அதேசமயம், சீனாவின் அதிகாரிகளும் பயணங்களை மேற்கொள்ளத் தவறவில்லை. சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் சர்வதேச விவகாரங்கள் திணைக்களத்தின் பிரதியமைச்சர் சன் ஹெயான் ஏப்பிரல் மாதம் இலங்கை வந்ததுடன் ஜே.வி.பியின் அலுவலகத்திற்கும் சென்றிருந்தார். ஆனால்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# ஒற்றுமையே தமிழர்களின் இருப்பை உறுதி செய்யும்



**மட்டு.நகரான்**

வடக்கு கிழக்கு இணைந்த தாயகத்தின் எழுச்சி,அதன் ஒற்றுமை என்பனவற்றின் அவசியம் குறித்து இலக்கு வார இதழில் நான் தொடர்ச்சியாக எழுதி வருகிறேன்.

வடக்கு கிழக்கில் முன்னெடுக்கப்படும் ஆக்கிரமிப்புகள், அத்துமீறல்கள், பாதுகாப்பு தரப்பினரின் அத்துமீறல்கள் ஜனநாயக உரிமை மீறல்கள் என இந்த நாட்டில் தமிழர்களுக்கு ஒரு சட்டம் சிங்களவர்களுக்கு ஒரு சட்டம் என்றும் தமிழ் மக்கள் வேறானவர்கள் அல்லது ஒதுக்கப்படவேண்டியவர்கள், அடக்குமுறைகளுக்குள் இருக்க வேண்டியவர்கள் என காலம்காலமாக ஆட்சிக்கு வரும் ஜனாதிபதிகள் முன்னெடுக்கும் செயற்பாடுகளுக்குள்தமிழர்கள்தமது உரிமைக்காக தொடர்ச்சியாக குரல் எழுப்பிவருகின்றனர்.



சிங்கள பெரும் தேசியவாதிகளின் தமிழர்கள் மீதான அடக்குமுறைகளும் அத்துமீறல்களுமே இந்த நாட்டில் தமிழர்கள் தங்களது உரிமைக்காக போராடவேண்டிய நிலைக்கு தள்ளியது. அந்த போராட்டம் அகிம்சை ரீதியாகவும் ஆயுத ரீதியாகவும் இராஜதந்திர ரீதியாகவும் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

அகிம்சை ரீதியான போராட்டங்கள் அடக்குமுறைகளுக்கு உள்ளாக்கப்பட்டதன் காரணமாகவே ஆயுதப்போராட்டம் வெடித்தது. இன்று ஆயுதப்போராட்டம் மௌனிக்கப்பட்டதன் காரணமாகவே இராஜதந்திர போராட்டம் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

இந்தநாட்டில்போர்மௌனிக்கப்பட்டதன் பின்னர் தமிழர்களின் குரல்வளைகள் நசுக்கப்பட்டதுடன் வடக்கு கிழக்கு தமிழர் தாயகம் என்பதை மறுதலிக்கும் வகையிலான பல்வேறு செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டேவந்தன. இந்த செயற்பாடுகள் என்பதன் பின்னணியில் இன்று தமிழர்களிடம் வாக்கு கேட்டு நிற்கும் அனைத்து சிங்கள வேட்பாளர்களும் இருந்துள்ளனர் என்பதை தமிழர் தாயகத்தில் உள்ள அனைவரும் உணர்ந்துகொள்ளவேண்டும்.

யுத்தம் மௌனிக்கப்பட்ட காலம் தொடக்கம் தமிழர்களுக்கான நிரந்தர அரசியல் தீர்வு விடயத்தில் சிங்கள பௌத்த மேலாதிக்க சக்திகள் தொடர்ந்து புறக்கணிக்கும் செயற்பாடுகளையே முன்னெடுத்து வந்திருக்கின்றன. தமிழர்களுக்கு நடந்த அநீதிகளுக்கு எந்த பொறிமுறையும் இல்லை, தமிழர்களுக்கான உரிமை சார்ந்த விடயங்களுக்கு எந்த திட்டமும் இல்லை. இவ்வாறான நிலையிலேயே தமிழர்களிடம் வாக்குப்பிச்சைக்காக கையேந்தி நிற்கின்றனர். கையேந்தி வாக்கினைப்பெற்றதன் பின்னர் அவர்களை காலால் எட்டி உதைக்கும் செயற்பாடுகளையே இந்த நாட்டில் சிங்கள ஜனாதிபதிகள் முன்னெடுத்துவந்திருந்தனர்.



இலங்கையைப் பொறுத்த வரையில் இதுவரையில் எட்டு ஜனாதிபதிகள் ஆட்சி செய்துள்ளனர். தமிழர்களின் போராட்ட காலத்தில் ஐந்து ஜனாதிபதிகளும் மௌனிக்கப்பட்டதன் பின்னர் மூன்று ஜனாதிபதிகளும் ஆட்சி செய்துள்ளனர். இந்த அனைத்து ஜனாதிபதிகளும் தமிழர்களைபுறந்தள்ளிசெயற்பட்டுவரும்நிலையிலேயே எங்களது உரிமைகளை எங்களுக்கான நீதியை உரத்துக் கேட்பதற்காக தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் நிறுத்தப்பட்டுள்ளார்.



சிலர் கேட்கின்றார்கள் யுத்தம் மௌனிக்கப்பட்டதன் பின்னர் இதுவரை காலமும் வேறு ஒரு சிங்கள வேட்பாளரை ஆதரித்த சமூகம் அதேபோன்று தேர்தலை பகிஸ்கரித்த சமூகம் இன்று பொதுவேட்பாளரை களமிறக்கியுள்ளது பல்வேறு சந்தேகங்களை ஏற்படுத்தியுள்ளதாக பரவலான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. உண்மையில் இந்த குற்றச்சாட்டுகள் நியாயமாகவிருந்தாலும் இந்த நாட்டிற்குள் வாழும் சமூகம் என்ற ரீதியில் சர்வதேச சமூகத்தின் ஒரு அழுத்தத்தின் கீழாவது தமிழ் மக்களுக்கான தீர்வினை வழங்குவார்கள் என்ற நம்பிக்கையிருந்தது.

மறுபுறம் தமிழ் தேசிய சக்திகளிடமிருந்த பிரிவுகளும் குத்துவெட்டுகளும் சர்வதேச சமூகத்திற்கு தமிழ் மக்கள் மத்தியிலிருந்த பரிவு என்பது குறைவடையும் நிலையும் காணப்பட்டது. தமிழ் தேசிய அரசியல் கட்சிகளுக்குள்ளும் புலம்பெயர் அமைப்புகளுக்குள்ளும் இருந்த ஒற்றுமையின்மை காரணமாகதமிழ்மக்கள்தொடர்பில்அக்கறையற்ற நிலையில் சர்வதேசம் இருந்த அதேநேரம் இந்த நிலைமையினை சாதகமாக பயன்படுத்திய சிங்கள பௌத்த மேலாதிக்க சக்திகள் தமிழர்களிடையே தொடர்ச்சியான பிளவுகளை ஏற்படுத்திய நிலை இருந்தது.



இவ்வாறான நிலையில் தமிழ் பொது வேட்பாளர் ஒருவர் இறக்கப்பட்டுள்ள நிலையில் தமிழ் தேசிய மக்கள் மத்தியில் காணப்பட்ட ஒற்றுமையீனமான செயற்பாடுகள் என்பது முடிவுக்கு வரும் நிலைமையினை ஏற்படுத்தியுள்ளது. இதேபோன்று சர்வதேச ரீதியில் செயற்படும் புலம்பெயர் அமைப்புகளும் இன்று இந்த தமிழ் பொதுவேட்பாளர் விடயத்தில் ஒன்றுபட்டு நிற்பதை காணமுடிகின்றது. அதேபோன்று இன்று தமிழ் தேசிய மக்கள் முன்னணியையும் சுமந்திரன் தரப்பினரையும் தவிர்த்து ஏனைய அனைத்து கட்சிகளும் ஒன்றிணைந்து நிற்பதும் தமிழர்களைப் பொறுத்த வரையில் சாதகமான விடயமாகவே நோக்கவேண்டியுள்ளது.

கிழக்கு மாகாணத்தினைப் பொறுத்தவரையில் தொடர்ச்சியான பிரச்சினைகளை எதிர்கொண்டுவரும் மாகாணமாக உள்ளதுடன் தமிழர்களை இலக்குவைத்து தொடர்ச்சியான அபகரிப்புகள்,அத்துமீறல்கள் இடம்பெற்றுவரும் நிலைமையினையும் காணமுடிகின்றது. அமெரிக்காவினை தளமாக கொண்டு இயங்கும் காணி உரிமைகள் தொடர்பில் ஆய்வுசெய்யும் ஒக்லேண்ட் நிலையம் கிழக்கு மாகாணத்தில் முன்னெடுக்கப்படும் பாரிய குடியேற்றங்கள் தொடர்பில் ஆய்வொன்றினை வெளியிட்டுள்ளது.

தொடர்ச்சி 15ஆம் பக்கம்

# திருகோணமலை: தமிழர் நிலங்களில் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம்: Oakland அறிக்கை

அமெரிக்காவை தளமாகக் கொண்டு, பிரதானமாக காணி உரிமைகள் தொடர்பில் ஆய்வுகளை மேற்கொள்ளும் ஒக்லேன்ட் நிலையம் *(The Oakland Institute)*, இலங்கையின் கிழக்கு மாவட்டமான திருகோணமலையில், வளம் மிகுந்த விளை நிலங்கள் அபகரிக்கப்படுவது வேகமெடுத்துள்ளது என தனது புதிய அறிக்கை ஒன்றில் கூறியுள்ளது.

பல தசாப்தங்களாக சிங்கள மக்களின் வலிந்த குடியேற்றம் காரணமாக, திருகோணமலை மாவட்டத்தின் குடிப்பரம்பல் கணிசமாக மாறியுள்ளது எனவும், நிலவுடைமையில் பாரிய சமமின்மை நிலவுகிறது எனவும் அந்த அறிக்கை சுட்டிக்காட்டுகிறது.



முன்னதாக ஜேர்மனியில் அரச ஊடகமான டோய்ச்சு வெலெவிற்கு (Deutsche Welle) அளித்த செவ்வி ஒன்றில் அமைச்சர் அலி சப்ரி, நாட்டின் வடக்கு பகுதியில் படைகள் ஆக்கிரமித்துள்ள நிலங்களில் 90 வீதம் நியாயமான உரிமையாளர்களிடம் திருப்பி அளிக்கப்பட்டுவிட்டதாக கூறியிருந்தார். ஆனால் அந்த தகவல் தவறு என இலங்கை தமிழரசுக் கட்சியின், யாழ்ப்பாண மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் அதை மறுத்திருந்தார்.

எனினும், கிழக்கில் தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள மக்கள் கிட்டத்தட்ட ஒரே விகிதார அளவில் வாழ்கின்ற சூழலில், அங்குள்ள நிலவரம் குறித்து அமைச்சர் வாய் திறக்கவில்லை.

திருகோணமலை, இலங்கைக்கு கேந்திர ரீதியாக மிகவும் முக்கியமானதொரு பகுதியாகும். மேலும் அங்குள்ள இயற்கை துறைமுகம் பெருமதிப்பு வாய்ந்த நிலையில்-அங்கு தான் நில அபகரிப்பு நடைபெறுகிறது என அந்த அறிக்கை கூறுகிறது.

'யுத்தத்தின் பின்னர் கடந்த 15 ஆண்டுகளாக தொடர்ந்தும் இராணுவ ஆட்சியின் கீழ் இருக்கும் திருகோணமலை மாவட்டத்தில் சிங்கள மக்களின் ஆதிக்கம் விரிவடைந்துவருகின்றது 'என ஒக்லேன்ட் நிலையத்தின் நிறைவேற்று பணிப்பாளர் அனுராதா மிட்டல் தெரிவித்துள்ளார்.

' வடக்கு- கிழக்கு தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் ஒன்றிணைந்த தாயகம் என்ற கோட்பாட்டை இல்லாமல் செய்யும் அதேவேளை, அவர்கள் செறிந்துவாழும் பகுதிகளில் அவர்களின் சரித்திரம் மற்றும் கலாசாரம் ஆகியவற்றை அழிப்பதை இந்த நில அபகரிப்பு முன்னெடுப்புக்கள் இலக்குவைக்கின்றன' என மிட்டல் மேலும் தெரிவித்தார்.

இந்த நில அபகரிப்புக்கள் காரணமாக, திருகோணமலை மாவட்டத்தில் தற்போது 27 சத வீதமாக இருக்கும் சிங்கள மக்கள் அந்த மாவட்டத்தின் மொத்த நிலப்பரப்பின் 36 சதவீதத்தை தம்வசம் வைத்துள்ளனர். 50 சதவீதத்துக்கும் அதிகமான நிலப்பரப்பு (41,164 ஏக்கர்) அபகரிக்கப்பட்டுள்ள நிலையில் கடந்த 10 வருடங்களில் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவு மோசமான நில அபகரிப்பை சந்தித்துள்ளது என அனுராதா மிட்டல் மேலும் தெரிவித்துள்ளார்.

'நீர்ப்பாசன திட்டங்கள், துறைமுக நவீனமயமாக்கல், வலு உற்பத்தி மற்றும் உல்லாசப்பயண மேம்படுத்தல் ஆகியவை உட்பட 'அபிவிருத்தி' என்ற போர்வையின் ஒரு பகுதியாக தமிழ், மற்றும் சிங்கள மக்களின் நிலங்களை அபகரிக்கும் 'சிங்களமயமாக்கல்' என அழைக்கப்படும் நடவடிக்கையின் ஒரு பகுதியாக இந்த நில அபகரிப்பு நடைபெற்று வருகின்றது. தொல்லியல் திணைக்களம், வனவள திணைக்களம், மகாவலி அதிகார சபை மற்றும் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை ஆகியவை உட்பட பல்வேறு அரச நிறுவனங்கள் இந்த சிங்களமயமாக்கல் நடவடிக்கையில் சம்பந்தப்பட்டுள்ளன.'

குச்சவெளி பிரேதேச செயலாளர் பிரிவில் அபிவிருத்தி என்ற போர்வையில் தீய எண்ணத்துடன் கேந்திர ரீதியாக வளமான நிலங்கள் எப்படி அபகரிக்கப்படுகின்றன என்பது குறித்தும் ஒக்லேன்ட் நிலையம் மேலும் விளக்கமாக கூறுகிறது. இதில் அபிவிருத்தி என கூறப்படுகின்ற' திட்டங்களில் பெரும்பாலானவை புதிய பௌத்த விகாரைகள் கட்டுவதற்கோ அல்லது இருக்கும் விகாரைகளை மேலும் விரிவாக்கவோ முன்னெடுக்கப்படுகின்றன.

'அந்த பகுதியில் அபகரிக்கப்பட்ட 3,887 ஏக்கர் நிலப்பரப்பில் குறைந்தது 26 விகாரைகள் கட்டப்பட்டுள்ளன. வளமான விவசாய மற்றும் கடற்கரை ஓரமாக இருக்கும் நிலங்கள் பெருமளவில் அபகரிக்கப்பட்டதன் விளைவாக, பாரம்பரிய தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் வாழ்வாதாரங்கள் இழக்கப்பட்டுள்ளன. அந்த நிலங்களை மீட்கும் முயற்சிகள் அங்கு நிலைகொண்டிருக்கும் பெருமளவிலான இராணுவ பிரசன்னத்தின் காரணமாக தடைபட்டுள்ளன.



இதன் நோக்கம் என்பது கிழக்குப் பகுதியில் குடிப்பரம்பலை மாற்றி அதன் மூலம் அங்கு நிலவும் சமூக மற்றும் கலாச்சார ஒற்றுமையை குலைப்பதாகும் எனவும் அந்த அறிக்கை குற்றஞ்சாட்டுகிறது.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் செறிந்து வாழும் பகுதிகளில் பௌத்த விகாரைகளை விஸ்தரிப்பதானது பௌத்த மயமாக்கலை மேற்கொள்வதற்கும் குடித்தொகை பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் கலாசார சின்னங்களை அழிப்பதற்கும் வழி செய்கின்றது எனவும் அந்த அறிக்கை மேலும் குற்றஞ்சாட்டுகிறது.

மிகப்பெரும் அளவில் திருகோணமலை மாவட்டத்தில் தமிழ் மக்களிடம் இருந்து நிலம் அபகரிக்கப்பட்டுள்ளமை ஆயிரக்கணக்கான மக்களை பாதித்துள்ளது. வளம்மிக்க விவசாய மற்றும் கடலோர நிலங்கள் அபகரிக்கப்பட்டுள்ளமை காரணமாக அவர்களின் பாரம்பரிய வாழ்வாதாரம் இல்லாமல் போயுள்ளது. தமது பகுதிகளுக்கு மீண்டும் திரும்பி அடிப்படை வசதிகள் எதுவும் இல்லாத நிலையில், தமது நிலங்களை மீளப்பெற்றுக்கொள்வதற்கு முயற்சி செய்யும் மக்கள் பல்வேறு சட்ட தடங்கல்களையும் மற்றும் குடியேற்றப்பட்ட மக்களிடம் இருந்து அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்கின்றனர்.

நாட்டின் வடக்கு கிழக்கு மாகாணங்களைப் பூகோள ரீதியாக இணைக்கும் திருகோணமலையின் குச்சவெளி பிரதேச செயலாளர் பிரிவிலேயே மிகவும் மோசமான வகையில் கடந்த 10 ஆண்டுகளில் அதிகப்படியான நிலங்களை இழந்துள்ளது எனவும் அந்த அறிக்கை கூறுகிறது.

நாடுவிடுதலையடைந்ததிலிருந்து தொடர்ச்சியாக சிங்கள ஆக்கிரமிப்பும் குடியேற்றமும், வளர்ச்சி என்ற போர்வையில் முன்னெடுக்கப்பட்டு வந்தாலும், அது 2009ஆம் ஆண்டு உள்நாட்டு யுத்தம் முடிவடைந்த பிறகு தொடர்ச்சியாக ஆட்சிக்கு வந்த அரசுகளால், தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களை மேலும் பலவீனப்படுத்தும் நோக்கில், இந்த நடவடிக்கை தீவிரமடைந்துள்ளது எனவும் அந்த புதிய அறிக்கை அம்பலப்படுத்தியுள்ளது.

கொழும்பு அரசாங்கத்தால் அபிவிருத்தி என்ற பெயரில் நிலங்கள் அபகரிக்கப்பட்டாலும், அவற்றில் பெரும்பாலான திட்டங்கள் யதார்த்த ரீதியில் தொடங்கப்படவே இல்லை எனவும், அடிப்படையில் அது சிங்கள மக்களுக்கு மட்டுமே உதவியுள்ளது என தமிழ் மற்றும் முஸ்லிம் மக்கள் நீண்டகாலமாகவே குற்றஞ்சாட்டுகின்றனர்.

கடந்த 2020இல், கிழக்கு மாகாணத்தில் தொல்லியல் பாரம்பரியத்தை பாதுகாத்து நிர்வகிக்க 11 பேர் அடங்கிய ஜனாதிபதி சிறப்பு செயலணி ஒன்று அமைக்கப்பட்டது. அதில் பெரும்பாலும் இராணுவத்தினர் மற்றும் பிக்குமார்களே இடம்பெற்றிருந்தனர். அந்த குழுவின் நோக்கமே அப்பகுதியிலுள்ள நிலங்களை அபகரிப்பதாகும் என்று ஒக்லேன்ட் நிலையம் கூறுகிறது.

மத ரீதியான நில அபகரிப்புகள் பற்றிய ஆவணப்படுத்தலின் பின்னர், 2023 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம், அமெரிக்காவின் சர்வதேச மத சுதந்திர ஆணைக்குழு *((United States Commission on International Religious Freedom)* மத சுதந்திர மீறல்களுக்காக இலங்கையை விசேட கண்காணிப்பில் சேர்க்குமாறு பரிந்துரை செய்திருந்தது.

' பௌத்த விகாரைகளை மற்றும் மடாலயங்களை கட்டுவதற்கும் விஸ்தரிப்பதற்கும் பௌத்த பிக்குகள் அனுமதிக்கப்படும் அதே வேளை இந்த பகுதிகளில் தமிழ் மக்களின் புராதன இந்து ஆலயங்கள் அழிக்கப்படுவதுடன் அங்கு மக்கள் வழிபாடு செய்வதற்கும் தடை விதிக்கப்படுகின்றது' என மிட்டல் மேலும் கூறியுள்ளார்.

ஒக்லேன்ட் நிலையம் முன்னர் வெளியிட்டுள்ள அறிக்கைகளும் சரி, தற்போது வந்துள்ள அறிக்கையும் சரி, இலங்கை அரசு தனது இராணுவ ஆக்கிரமிப்பின் மூலம், வடக்கு மற்று கிழக்கு மாகாணங்களிலுள்ள தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களை அடக்கி தமது கட்டுப்பாட்டுக்குள் வைத்துள்ளது என்பதை ஆதாரங்களுடன் ஆவணப்படுத்தியுள்ளது.




'இந்த மாகாணங்களில் தொடர்ந்து இராணுவ பிரசன்னம் மிக அதிகளவில் உள்ளது. இங்கு தான் இலங்கை இராணுவத்தின் ஏழு பிராந்திய தலைமையகங்களில் ஐந்து உள்ளன. இப்படியான மிக அதிக இராணுவ பிரசன்ன இங்குள்ள நிலங்களை அபகரிக்கவும், பௌத்த விகாரைகளை அமைக்கவும், சிங்கள குடியேற்றவாசிகளை கொண்டு வரவும் வழி ஏற்படுத்தி கொடுக்கிறது.'

திருகோணமலை மாவட்டத்தில் நம்ப முடியாதளவில் வளமான நிலங்களும், கடலோரப்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# மோதல்கள் நடைபெறும் நாடுகளில் கல்வியின் மீதான ஆபத்துகளும் தீர்வுகளும்

**இறுதிப் பகுதி**

- அண்மையில் திருகோணமலையில் புதிதாக ஆரம்பிக்கப்பட்ட சிங்கள வலயத்திற்குப் போதியளவு எண்ணிக்கையான பாடசாலைகள் இல்லாததால், வடக்குகிழக்கு மாகாணம் பிரிக்கப்பட்டதில் இருந்து சிங் களவர்கள் ஆதிக்கம் செலுத்தும் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சு, திருகோணமலைக் கல்வி வலயத்தில் இருந்து நான்கு தமிழ் மொழி மூலப் பாடசாலைகளை மாற்றுவதற்குத் தீர்மானித்துள்ளது. தமிழ் மொழிப் பாடசாலைகளில 99% நிர்வகிக்கும்




வலயமான திருக்கோணமலை வலயத்தில் இருந்த நான்கு தமிழ்மொழி பாடசாலைகளை முதலிக்குளம் என்ற தமிழ் பிரதேசத்தில், அதிக ளவிலான சிங்களவர்களைக் குடியேற்றி கோமரங்கடவெல என்று சிங்களப் பெயராக மாற்றப்பட்ட கிராமத்தில் தனது அலுவலகத்தைகொண்டுள்ளதிருகோணமலை வடக்கு கல்வி வலயத்தின் நிர்வாகத்தின்கீழ் இவை கொண்டு வரப்பட்டுள்ளன. இதனால் இப்பாடசாலைகளில் கடமையாற்றும் தமிழ் மொழிமூல ஆசிரியர்கள் தற்போது புதிய கல்வி அலுவலகத்துடன் தொடர்பு கொள்வதில் மிகவும் சிரமப்படுகின்றனர், அங்கு அனைத்து ஊழியர்களும் தமிழ் மொழி தெரியாத சிங்களவர்களாகவே இருப்பதால், அவர்களுக்கான பயிற்சிப் பட்டறைகளும் பயிற்சி வகுப்புகளும் சிங்கள மொழியிலேயே நடத்தப்படுகின்றன. திருகோணமலை கல்வி வலயத்தில் தமிழ் மொழியில் பேணப்பட்டு வந்த, தமது தனிப்பட்ட கோப்புகளைப் புதிய சிங்கள வலயத்தில் சென்று பார்வையிட முடியாமல் இருப்பதால், அவர்களது சம்பள அதிகரிப்பு, பதவி உயர்வுகள் போன்றவற்றை உரிய காலத்தில் பெற்றுக்கொள்ள முடியாது சிரமப்படுகின்றனர்.அனைத்து சுற்றறிக்கைகளும் சிங்கள மொழியில் மாத்திரமே வெளியிடப்படுகின்றன என தமிழ் மொழி ஆசிரியர்கள் முறையிடுகின்றனர்.

- கல்வி மீதான தாக்குதல்கள் சிறுவர்களின் வாழ்க்கையில் பேரழிவை ஏற்படுத்திச் சிறுவர்களின் கல்வியை சீர்குலைத்து, கற்றல் இழப்பு மற்றும் இடைவிலகல் வீதத்தை



அதிகரிக்க வழிவகுக்கும். அவை உடல் மற்றும் உளவியல் ரீதியான பாதிப்புகள் ஏற்படுவதுடன் இறுதியில் ஒரு நிலையில் சிறுவர்களின் மரணத்திற்கோ அல்லது தற்கொலைகளுக்கோ வழிவகுக்கும்.



**வல்வை.ந.அனந்தராஜ்**
B.A. Hons., M.A,
Dip-In-Journalism, Dip-In Jounalism,
SLPS,SLEAS

இவ்வாறான பல்வேறு வடிவங்களிலான ஆபத்தை எதிர்கொண்டு தொடர்ந்து கற்று கற்பிக்கும் குழந்தைகள் மற்றும் கல்வியாளர்களின் மனோநிலையில் ஒருமாற்றத்தை ஏற்படுத்துவதற்கு இந்த அனைத்துலக நாள் ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளது. மோதல்கள் இடம் பெறும் பிரதேசங்களில் ஆபத்துகள் இருந்தபோதிலும், பல சிறுவர்கள் மற்றும் கல்வியாளர்கள் ஆயுத மோதல்களுக்கு மத்தியிலும் தொடர்ந்தும்



பாடசாலைகளுக்குச் சென்று வருகின்றனர். இதனை இலங்கையில் யுத்தம் நடைபெற்றுக் கொண்டிருந்த காலத்தில் தமிழீழ விடுதலைப்புலிகளின் நிர்வாகத்தின் கீழ் வடக்குக் கிழக்கு மாகாணம் இருந்த பொழுது, அவதானிக்கக்கூடியதாக இருந்தது. எந்த ஒரு யுத்த நிலைமையிலும் குறிப்பாக வன்னிப் பிரதேசங்களில் கல்வி கற்றலில் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை. கல்வி நிறுவனங்களின் மீது குண்டு வீச்சுக்கள் மற்றும் எறிகணைகள் வீசப்படும் சந்தர்ப்பங்களில் மட்டும் மாணவர்களும் ஆசிரியர்களும் ஓடிச்சென்று பதுங்கு குழிகளில் பதுங்கிக் கொண்டிருந்த பின்னர் குண்டு வீச்சு விமானங்கள் தாம் வந்த வேலையை முடித்துவிட்டு அப்பால் சென்றதும் மீண்டும் வகுப்பறைக் கல்வியைத் தொடருவார்கள். அவ்வாறான நிலைமைகளில் மோதல்களில் ஈடுபடும் குழுவினர் சிறுவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கான பாதுகாப்பை வழங்குவது அவசியமானதாகும்..

ஆயுத மோதல்கள் இடம்பெறும் சூழ்நிலைகளில் கல்விக்கு ஆதாரமாக விளங்கும் யுனெஸ்கோ (UNESCO) மற்றும் யுனிசெப் (UNICEF) ஆகியவை ஐக்கிய நாடுகள் அமைபத்தற்குள்ளேயும் வெளியேயும் உள்ள பங்காளிகளுடன் நெருக்கமான முறையில் ஒத்துழைப்புடன் செயற்பட்டு சர்வதேச தினத்தை ஆண்டுதோறும் அனுசரிப்பதற்கான அனைத்துச் செயற்பாடுகளையும் ஏற்றுக்கொள்ளச் செய்வதிலேயே இந்த நோக்கங்களின் வெற்றி தங்கியுள்ளது.

ஆயுத மோதல்களால் பாதிக்கப்பட்ட நாடுகளில் ஆபத்துக்கள் மற்றும் அச்சுறுத்தல்களின் மத்தியிலும் களமுனைகளில் நின்று பணியாற்றும் ஐ.நா. நிறுவனங்களின் பணியாளர்கள், நெருக்கடிகள் மிகுந்த காலங்களிலும், மோதல்கள் இடம் பெறும் நாடுகளில் அனைவருக்கும் தரமானதும்,



சமமானதுமான கல்வி வாய்ப்புகளை வழங்குவதற்கான தங்கள் அர்ப்பணிப்புக்களை மேற்கொண்டு வருகின்றனர்.

எனவே உலகளாவிய ரீதியில் சர்வ தேச தினத்தை கடைப்பிடிப்பது, கல்வி மற்றும் அனைவருக்கும் நிலையான அமைதியையும், சுயாதீனமான கல்வியை முன்னெடுப்பதற்கும் பாதுகாப்பை வழங்குவதற்குமான பாதுகாப்பை வழங்குவதற்குமான நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்கான ஒரு தளமாக செயல்படுகிறது. எனவே மோதலில் ஈடுபடும் தரப்புக்கள் ஐ.நாவின் இந்தப் பிரகடனத்திற்கு மதிப்புக் கொடுப்பதுடன் அதனை அனுசரித்தும் நடக்கவேண்டும்.

**போரில் ஈடுபட்டுவரும் நாடுகள் பின்பற்ற வேண்டிய விடயங்கள் :**

- உட்படுத்தல் கல்வி (Imclusive Education), மற்றும் அனைவருக்கும் சமமானதும் தரமானதுமான கல்வியை வழங்குவதை உறுதி செய்வதன் மூலம் அரசாங்கங்களுக்கு பொறுப்புக்களை உருவாக்கும் வகையில் விழிப்புணர்வை ஏற்படுத்துதல்.
- கற்றல், கற்பித்தலில் ஈடுபடும் பாடசாலைகள், ஏனைய உயர்கல்வி நிறுவனங்கள், கற்போர்கள் மற்றும் கல்விப் பணியாளர்கள் ஆகியோர் கற்பதில் இடையூறுகள் ஏற்படுத்தக்கூடிய அபாயத்தை விளைவிக்கக்கூடிய தாக்குதலில் இருந்து பாதுகாத்தல்.
- சிறுவர்களின் கல்விச் செயற்பாடுகளைத் தடுக்கும் நடவடிக்கைகளைத் தவிர்க்கவும், கற்றல் செயற்பாடுகளை எளிமையானதாக்கவும், சாத்தியமான அனைத்து வழிமுறைகளையும் எடுப்பதன் மூலம் மனிதாபிமான முறையில் அவசரநிலைகளில் பாதுகாப்பான பாடசாலைச் சூழலை மேம்படுத்துவதற்கான முயற்சிகளை முன்னெடுத்தல்.
- கற்றல் செயற்பாடுகளுக்குத் தேவையான அனைத்து வளங்களையும், நிதியுதவிகளையும் அதிகரிப்பதன் அவசியத்தை மேலும் வலியுறுத்துதல்.
- அனைவருக்கும் சமமானதும், பாரபட்சம் அற்றதுமான கல்வியை வழங்குவதுடன் இனம், மதம்,மொழி, பால் வேறுபாடின்றி சகல சிறுவர்களையும் அந்தந்த நாடுகளின் பிரஜைகளாக மதித்து நடத்துதல் வேண்டும்.

தொடர்ச்சி 17ஆம் பக்கம்

# வாக்களிப்பில் கவனம் தேவை

துரைசாமி நடராஜா



இலங்கையின் ஜனாதிபதி தேர்தல் களம் சூடுபிடித்திருக்கின்றது. இத்தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்கள் தமது வெற்றியை உறுதிப்படுத்திக் கொள்ளும் நோக்கில் பல்வேறு காய் நகர்த்தல்களையும் மேற்கொண்டு வருகின்றனர். இதேவேளை மலையக மக்களின் நலன் சார்ந்த வாக்குறுதிகள் உள்ளிட்ட மேலும் பல வாக்குறுதிகள் பலவற்றையும் அவர்கள் வழங்கி வரும் நிலையில் இதன் சாதக விளைவுகள் தொடர்பில் பொறுத்திருந்தே பார்க்க வேண்டியுள்ளது. இந்நிலையில் தற்போது நடைமுறையில் உள்ள விகிதாசாரத் தேர்தல் முறை கணிப்பீட்டு முறையில் அமைந்துள்ளதால் பாமர மக்கள் வாக்களிப்பதில் பல சிரமங்களை எதிர்கொள்ளும் நிலையில் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை தொடர்ச்சியாக அதிகரித்து வரும் நிலையில் எதிர்வரும் ஜனாதிபதி தேர்தலில் வாக்காளர்கள் மிகுந்த அவதானத்துடன் வாக்களிக்க வேண்டுமென்றும் புத்திஜீவிகள் வலியுறுத்தியுள்ளனர்.

எதிர்வரும் 21 ம் திகதி சனிக்கிழமை ஜனாதிபதி தேர்தலை நடத்துவதற்கான முன்னெடுப்புக்களை தேர்தல் திணைக்களம் செவ்வனே மேற்கொண்டு வருகின்றது. இத்தேர்தலில் 39 வேட்பாளர்கள் போட்டியிடும் நிலையில் நாடளாவிய ரீதியில் சுமார் 13 ஆயிரம் வாக்களிப்பு மத்திய நிலையங்கள் அமைக்கப்படவுள்ளன. ஜனாதிபதி தேர்தல் பணிகளுக்காக இம்முறை இரண்டு இலட்சம் வரையான அரச ஊழியர்கள் கடமையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர். தத்தமது வேட்பாளர்களை வெற்றி பெறச் செய்யும் நோக்கில் அரசியல் கட்சிகளும் ஏனைய அமைப்புக்களும் முழுமூச்சுடன் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றன. இதனிடையே வேட்பாளர்கள் தத்தமது தேர்தல் விஞ்ஞாபனத்தை முன்வைத்து தமது எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் மக்களை தெளிவுபடுத்தி வருகின்றனர்.

### சிறுதோட்ட உரிமையாளர்

அரசியலமைப்பில் உறுதிப்படுத்தப்பட்டுள்ள 13 ஆவது திருத்தத்தின் ஊடான அதிகாரங்கள் வடக்கு உள்ளிட்ட அனைத்து மாகாணங்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படும். மேலும் பொலிஸ் அதிகாரம் தொடர்பான தீர்மானத்தை அடுத்து வரக்கூடிய புதிய பாராளுமன்றம் தீர்மானிக்கும் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வெளியிடப்பட்டுள்ள தேர்தல் விஞ்ஞாபனத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. மேலும் எரிபொருள் கேந்திரமாக கிழக்கு மாகாணம், மாவட்ட அபிவிருத்தி சபைகள் நிறுவப்படும். காணிப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தேசிய காணி ஆணைக்குழு ஏற்படுத்தப்படும். மாகாண சபையின் முதலாவது உப பிரிவிலுள்ள அதிகாரங்கள் மீண்டும் வழங்கப்படும். உண்மை, நல்லிணக்க ஆணைக்குழு சட்டம் அமுல்படுத்தப்படும் போன்ற விடயங்கள் ஜனாதிபதி ரணிலின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளன. இதேவேளை தற்போதைய அரசியல் முறையை ஒரே நாட்டுக்குள் 13 ஆவது அரசியலமைப்புத் திருத்தத்தின் அதிகபட்ச அதிகாரப் பகிர்வுடன் கூடிய பாராளுமன்ற முறைமைக்கு மாற்றுவதே தமது கொள்கையாகுமென எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தனது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தியுள்ளார். மேலும் புதிய அரசியலமைப்பு உருவாக்கப்படும், அனைத்து ஆசிரியர்களுக்கும் இலவச பொதுப் போக்குவரத்து வசதி, உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் தொடர்பில் நாளாந்தம் விசாரணை, மாகாண சபையின் அதிகாரங்கள் மீளப்பெறப்பட மாட்டாது. பெருந்தோட்டத் தொழிலாளர்கள் சிறுதோட்ட உரிமையாளர்களாக மாற்றப்பட்டு அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டுக்கு வித்திடப்படும் போன்ற பல விடயங்களும் சஜித்தின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளீர்க்கப்பட்டுள்ளன.

ஒற்றையாட்சி பாதுகாக்கப்படும், பட்டினியை ஒழிக்க செயற்றிட்டம், மொத்த தேசிய உற்பத்தியே இலக்கு, வரிச் சுமையை தளர்த்த நடவடிக்கை உள்ளிட்ட பல விடயங்கள் ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்சவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் குறிப்பிடப்பட்டுள்ளன. இதேவேளை காணாமல் போனோர் ஆட்கடத்தல் தொடர்பில் விசாரணை, இனக் கட்டமைப்பை மாற்றியமைக்கும் குடியேற்றங்கள் நிறுத்தப்படும், வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி, ஒரு வருடத்தில் மாகாண சபை தேர்தல், அரசியல் கைதிகள் விடுதலை போன்ற இன்னும் பல விடயங்கள் தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமாரவின் தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தப்பட்டுள்ளன.

இந்நிலையில் ஜனாதிபதி வேட்பாளர்கள் மலையக மக்களின் காணியுரிமை, வீட்டுரிமை, பெருந்தோட்ட மக்களை சிறுதோட்ட உரிமையாளர்களாக மாற்றியமைத்தல், மலையக பல்கலைக்கழக உருவாக்கம், சம்பள அதிகரிப்பு, இளைஞர் அபிவிருத்தி, குறைந்த வருமானம் பெறுவோருக்கான நிவாரணங்கள், மாற்றுத் தொழில் ஏற்பாடுகள், தனிவீட்டுத் திட்டம் உள்ளிட்ட பல விடயங்கள் குறித்தும் தத்தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் வலியுறுத்தியுள்ளமையும் நோக்கத்தக்கதாகும். இவ்வாறாக தமது வெற்றியை மையப்படுத்தி வேட்பாளர்கள் கணிசமான வாக்குறுதிகளை தேர்தல் விஞ்ஞாபனத்தில் அள்ளி வழங்கியுள்ளனர். இந்நிலையில் ஜனாதிபதி தேர்தலில் வெற்றி பெறும் வேட்பாளருக்கு முன்னால் பாரிய சவால்கள் காணப்படும் என்பதோடு அவற்றை நிறைவேற்றுவதற்கு அவர் பகீரதப் பிரயத்தனத்தை மேற்கொள்ள வேண்டியேற்படும் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும்.

### விகிதாசார தேர்தல் முறை

இதேவேளை சமகாலத்தில் நடைமுறையில் உள்ள விகிதாசாரத் தேர்தல் முறை தொடர்பிலும் இதனால் ஏற்படும் பாதக விளைவுகள் தொடர்பிலும் தற்போது தேர்தல் மேடைகளில் பேசப்படுவதையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இதுபோன்ற பல குளறுபடிகளின் காரணமாக புதிய அரசியலமைப்பினை முன்வைக்க வேண்டியதன் அவசியமும் தேர்தல் மேடைகளில் பேசு பொருளாகியுள்ளது. விகிதாசார தேர்தல் முறையானது1978 ம் ஆண்டு அரசியலமைப்பின் ஊடாக இலங்கையில் அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தேர்தல் முறையைஅறிமுகப்படுத்துவதற்குமுன்னர்நடைமுறையிலிருந்த சார்பு ரீதியான தொகுதி வாரியான பெரும்பான்மை தேர்தல் முறையில் காணப்பட்ட குறைபாடுகளும் 1977 இல் 5/6 பெரும்பான்மையுடன் ஆட்சிக்கு வந்த ஐக்கிய தேசியக் கட்சியின் நீண்டகால உள்நோக்கங்களுமே இத்தேர்தல் முறையின் தோற்றத்திற்கு காரணமாக அமைந்திருந்ததாக புத்திஜீவிகள் குறிப்பிடுகின்றனர்.



இந்த வகையில் விகிதாசார தேர்தல் முறை பல்வேறு சாதக விளைவுகளுக்கும் அடித்தளமாக அமையும் என்று கருதப்பட்டபோதும் இந்த எதிர்பார்ப்பு மழுங்கடிக்கப்பட்ட ஒரு நிலையினையே காணமுடிகின்றது. உட்கட்சிப் பூசல்கள் அதிகரிப்பதற்கும், ஐக்கியம் சீர்குலைவதற்கும், நாட்டின் அபிவிருத்தி தடைப்படுவதற்கும் விகிதாசார தேர்தல் முறை வலுசேர்த்துள்ளதாக கண்டனங்கள் பலவும் முன்வைக்கப்பட்டு வருகின்றன. இத்தேர்தல் முறை பிரதிநிதிகளுக்கும் வாக்காளர்களுக்கும் இடையிலான

தொடர்ச்சி 15ஆம் பக்கம்





# தமிழ்ப் பொது வேட்பாளருக்கே ஆதரவு: தமிழக அரசியல் அமைப்புக்கள்



**தோழர் தியாகு,**
பொதுச் செயலாளர், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம்

**இலங்கை அதிபர் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளர் போட்டியிடுவதன் பன்னாட்டு முக்கியத்துவம் என்ன?**

1) தெற்காசியப் புவிசார் அரசியலில் அனைவருக்கும் இந்தியா சட்டாம் பிள்ளையாக நடந்து கொள்ள முடியும் என்ற எண்ணத்தில் மண் விழுந்துள்ளது. தமிழினவழிப்பு நடந்துள்ளது என்ற உண்மையைக் கூட அறிந்தேற்காமலும், ஐநா மன்றத்தில் தமிழர்களுக்கு ஆதரவாக நிலையெடுக்காமலும் தமிழ்த் தலைமைகளை ஆட்டிப் படைத்து தமிழ் மக்களைப் பகடைகளாக உருட்டும் இந்திய வல்லரசின் கூடாப் போக்குக்குத் தமிழீழ மக்கள் அமைதியாகவும் சிறிலங்காவின் சட்டத்துக்கு உட்பட்டும் அளித்துள்ள விடைதான் தமிழ்ப் பொது வேட்பாளர். தமிழ்மக்களுக்கு இந்தியாவின் ஆதரவும் உதவியும் தேவை என்ற கூற்று இந்தியாவுக்குத் தமிழ்மக்களின் பரிவு தேவை என்பதை மறுப்பதாகி விடக் கூடாது. தமிழ்மக்கள் தமக்கான நீதியும் உரிமையும் கருதித் தாமே முடிவெடுத்துக் கொள்வார்கள் என்பதை இந்தியா புரிந்து கொள்ள வேண்டும். இந்திய வல்லரசு என்ன சொன்னாலும் தமிழர்கள் கேட்டு நடப்பார்கள் என்ற எண்ணத்தை இந்தியா கைவிட வேண்டும். தமிழர்களிடம் தனக்கு செல்வாக்கு வேண்டும் என்று இந்தியா கருதினால் அது அவர்களின் கோரிக்கைகளுக்குத் தெளிவான ஆதரவு தெரிவிக்க வேண்டும். அவர்கள் மறுதலித்து விட்ட உதவாக்கரைத் தீர்வுகளை அவர்கள் மீது திணிக்க முயல்வதைக் கைவிட வேண்டும்.

2) அனுரகுமாரோடு இந்தியா ஒருகட்டத்தில் பேசிப் பார்த்தது. அது பலிக்கவில்லை. இரணில் சீனத்தின் பக்கம் என்று பார்க்கப்படுவதால் அவரையும் ஆதரிக்க முடியாது. 'அறகலயா' போராட்டத்துக்குப் பின் இராசபட்சே குடும்பம் மீண்டெழ வழி இல்லை. சஜித் பிரேமதாசாதான் மிச்சம். அவருக்குத் தமிழர் வாக்குகளைப் பெற்றுத்தர சுமந்திரன் வகையறாவைக் கைக்கருவியாக்கிக் கொள்வது இந்திய வல்லரசின் முயற்சி. தமிழ்ப் பொது வேட்பாளர் பெருமளவில் தமிழர் வாக்குகளைப் பெற்றுக் கொண்டால் இந்தியா இரு தரப்பிலும் தனிமைப்படும். மாலத்தீவு, வங்காள தேசம், நேபாளம் என்ற வரிசையில் இலங்கைத் தீவிலும் இந்தியாவுக்கு இது போதாத காலம்.

3) தமிழினவழிப்பில் சிங்களப் பேரினவாதத்துக்குத் துணை போன இந்திய வல்லரசு அம்மக்களின் ஈடுசெய் நீதிக்கான போராட்டத்திலும் எதிர்நிலை எடுத்து விட்டுத் தமிழர்கள் இந்தியாவின் சொல்படிக் கேட்க வேண்டும் என எதிர்பார்ப்பது எப்படி நியாயமாகும்?

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



**வன்னி அரசு,**
துணைப்பொதுச்செயலாளர்
விடுதலைச்சிறுத்தைகள் கட்சி
தமிழ்நாடு

இலங்கை சனாதிபதியை தேர்வு செய்வதற்கான பொதுத்தேர்தல் வரும் செப்டம்பர் 21 ம்தேதி நடைபெறவிருக்கிறது.

இத்தேர்தலில் தற்போதைய சனாதிபதி ரணில் விக்ரம சிங்கேவும் எதிர்க்கட்சித்தலைவர் சஜீத் பிரமேதாசாவும் போட்டியிடுகின்றனர்.

ராஜபக்சேவின் மூத்த மகன் நாமல் இராஜபக்சேயும் சனாதிபதி தேர்தலில் இறக்கப்பட்டுள்ளார். இச்சூழலில், தமிழர்கள் சார்பாக ஒருமித்து பொது வேட்பாளராக திரு.அரியநேத்திரன் அவர்கள் நிறுத்தப்பட்டுள்ளார்.

இதன் மூலம் தமிழர்கள் ஒற்றுமை வலிமைப்பட்டுள்ளது.

தேர்தல் பரப்புரையில் திரு.அரியநேத்திரன் அவர்களுக்கு தமிழ் மக்கள் அளித்துவரும் வரவேற்பு சிங்கள கட்சிகளிடையே பெரும் அச்சத்தை உருவாக்கியுள்ளது.

சிங்கள தலைமைகள் எப்போதும் தமிழீழ மக்களுக்கு எந்த நன்மையும் செய்ய முன்வராது என்பது கடந்த காலங்களில் ஏற்பட்ட கள உண்மையாகும்.

இச்சூழலில், முதன்முறையாக தமிழர்களிடையே ஒருமித்த கருத்து ஏற்பட்டு பொது வேட்பாளராக திரு.அரியநேத்திரன் நிறுத்தப்பட்டிருப்பது வரவேற்க கூடியதாகும்.

தமிழீழ தலைவர் மேதகு பிரபாகரன் அவர்கள் உருவாக்கிய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பில் நாடாளுமன்ற உறுப்பினராக இருந்தவர் திரு.அரியநேத்திரன்.

அது மட்டுமல்ல, தமிழீழ விடுதலையில் எந்த சமரசமும் இல்லாமல் போராடி வருபவர். மேதகு பிரபாகரன் அவர்களின் நம்பிக்கைக் குரியவர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு எதிராக கருணா போன்றவர்கள் நின்ற போது, அந்த மாவட்டத்திலிருந்து தலைவர் மேதகு பிரபாகரன் அவர்களோடு நின்றவர். அப்படிப்பட்ட ஈழ விடுதலை உணர்வாளர் அதிக வாக்குகளைப் பெற்றால் தமிழர்களின் உரிமை, தமிழர்களின் உரிமை மீட்கப்படும். சிங்கள பவுத்த பேரினவாதிகளின் ஒடுக்குமுறையிலிருந்து தமிழ் மக்களை பாதுகாக்க முடியும்.

மேதகு பிரபாகரன் அவர்களது கனவை நனவாக்க முடியும்.

ஆகவே, திரு.அரியநேத்திரன் அவர்கள் வெற்றிபெற வேண்டுமானால், தமிழர்கள் குடும்பம் குடும்பமாக, சிந்தாமல் சிதறாமல் 'சங்கு' சின்னத்தில் வாக்களிக்க வேண்டும்.

*எங்கள் வாழ்வும்*
*எங்கள் வளமும்*
*மங்காத தமிழென்று*
*சங்கே முழங்கு!*
*எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்*
*இங்குள்ள தமிழர்கள்*
*ஒன்றாதல் கண்டே!*

எனும் புரட்சிக்கவிஞர் பாரதிதாசன் கவிதை வரிகளுக்கு ஏற்ப ஒற்றுமை சங்கு முழங்குவோம்.

நம் பகைவர்களை தேர்தல் களத்தில் தோற்கடிப்போம். சிங்களத்தலைமைகளோடு தமிழீழத்தை வேட்டையாடத்துடிக்கும் சீனா, அமெரிக்கா மற்றும் இந்தியாவின் ஆதிக்கத்தை தகர்த்து தமிழீழ தனித்துவத்தை நிறுவு வோம். ஆகவே, எமது உறவுகளே ஒன்றிணைந்து திரு. அரியநேத்திரன் அவர்களுக்கு சங்கு சின்னத்தில் வாக்களிக்குமாறு விடுதலைச்சிறுத்தைகள் சார்பில்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்



**தோழர் கொளத்தூர்மணி,**
பெரியார் திராவிடக்கழகம்

ஈழத்தமிழ் மக்களுடைய பிரதிநிதிகள் யார் என்று தெரியாத ஒரு சூழல் ஏற்பட்டுள்ளது. ஒரு கருத்தைக் கேட்பதென்றால் கூட யாரிடம் கேட்பது என்ற கேள்வி எழுகின்றது. எனவே தமிழ்ப்பொது வேட்பாளர் தமிழ் மக்களுடைய அரசியல் நகர்வுகளை முன்னெடுப்பதற்கு ஒரு பிரதிநிதியாக முன் நிறுத்தலாம் என்ற ரீதியிலும் தற்போது தமிழர் மண்ணில் அரசியல் நகர்வுகள்தான் சாத்தியம் என்கின்ற நிலையில் தமிழ்ப்பொது வேட்பாளர் ஒரு முக்கிய இடத்தைப் பெறுகின்றார் என்கிறார் தலைவர், திராவிடர் விடுதலைக் கழக ஒருங்கிணைப்பாளர் கொளத்தூர் தா.செ. மணி அவர்கள்.

முன்னதாக பொது வேட்பாளருக்கு ஆதரவாக, ஈழத் தமிழர் வாழ்வுரிமைக் கூட்டமைப்பு சார்பில் கொளத்தூர் தா.செ. மணி வெளியிட்ட அறிக்கையில், தமிழ் மக்கள் பொது வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்து வாக்களிக்க வேண்டும் என்பதை ஓர் அறைகூவலாக விடுத்து, இம்முயற்சிக்கு நமது ஆதரவையும் வெளிப்படுத்தியிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.



**ஜோன்சன்,**
சட்டத்தரணி

சுய நிர்ணய உரிமையைப் பெற, தமிழ்ப்பொது வேட்பாளர் என்ற உத்தி உதவும்.

என்னைப்பொறுத்தவரையில் தற்போதைய இலங்கை, தமிழ் மக்கள் குறித்து தமிழக அரசியலில் அதிகளவில் கவனம் செலுத்தப்படுகின்றதா எனக்கேட்டால் அதை நான் 'இல்லை' என்றுதான் கூறுவேன்.

தமிழ்வேட்பாளரை, தமிழக அரசியல் கட்சிகள் ஆதரிப்பதற்கான காரணம், அவர்களுக் கிடையிலான தொடர்பு,நட்பு,சில தோழமை அழுத்தங்கள் எனக் கூறலாம். அதன் அடிப்படையில்தான் இலங்கை தேர்தலில் தமிழ்ப்பொது வேட்பாளரை ஆதரியுங்கள் எனக் கூறி அறிக்கைகளை வெளியிட்டுள்ளனர்.

மேலும் இலங்கையில் நடப்பது முழுமையான பௌத்த சிங்கள பேரினவாத ஆட்சிக்கான தேர்தல். முன்னைய காலங்களிலும் அதுதான் நடந்துள்ளது. எனவே தமிழ்ப்பொது வேட்பாளர் அரியநேத்திரன்வெற்றிபெறப்போவதுகிடையாது, ஆனால் இலங்கையில் எந்த உரிமையும் இல்லாமல் தொடர்ந்து இனவழிப்புக்கு உள்ளாகி வரும் ஒரு செய்தியை அரிய நேத்திரனை ஆதரிப்பதன் மூலம் சர்வதேசத்துக்கு வெளிக்காட்ட முடியும். இலங்கையின் அரசியல் அமைப்பே தமிழர்களுக்கு எதிராக இருக்கின்றது. இதில் எந்த மாற்றத்தையும் சிங்கள ஜனாதிபதிகள் செய்யப்போவதில்லை. எனவே தமிழ்ப்பொது வேட்பாளருக்கு வாக்கு போடுவதன் மூலம் தமிழர்கள் ஒன்றிணைந்து தமது சுய நிர்ணய உரிமையைப் பெற தொடர்ந்து செயற்பட வேண்டும். அதற்கு தமிழ்ப் பொது வேட்பாளர் ஒரு முன்மாதிரியான செயற்பாடு.

**குழந்தைசாமி,**
அருட்தந்தை முனைவர்

**இலங்கை ஜனாதிபதித் தேர்தலின் பின் தமிழ் மக்கள் தம்மை பாதுகாத்துக்கொள்ள என்ன செய்ய வேண்டும்?**

முதலில் இலங்கை அரசியல் அமைப்பு சட்டத்தையே மாற்றியமைக்க வேண்டும். அதாவது ஒரு இனக்குழுவுக்கு சாதகமாக இல்லாமல், அனைத்து மதங்களுக்கும் அனைத்து இனக்குழுக்களுக்கும் ஏற்றால் போய் ஒரு சார்பற்ற அந்த அரசியல் அமைப்பு இருக்க வேண்டும்.

அடுத்து சுயநிர்ணய உரிமை என்பதை நிலை நிறுத்தியாக வேண்டும். ஏனெனில் இலங்கையில் எந்த சிங்கள அரசியல் கட்சி களைச் சேர்ந்த தலைவர்கள் ஆட்சிப் பொறுப் பேற்றாலும் தமிழர்களுக்கு அவர்கள் எந்த ஒரு உரிமையையும் வழங்கப்போவதும் இல்லை, எந்த தீர்வையும் வழங் கப்போவதில்லை. அதில் சிங்களத்தலைமைகள் ஒத்த சிந்தனையில்செயற்படுகின்றதைக் காண முடிகின்றது.

ஒது ஒரு பாசிச சிந்தனை. ஆக சிங்கள இனத்துடன் இணைந்து வாழ்வது என்பது தமிழர்களால் முடியாது. தமிழர் தாயகத்தில் நில அபகரிப்பு பரவலாக திட்டமிட்டு முன்னெடுக்கப்படுகின்றது. தற்போதும் பயங்கரவாத சட்டத்தின் கீழ் கைது நடவடிக்கைகள் தொடர்கின்றது. இதைப் போல் இன வழிப்பு என்பது வெவ்வேறு வடிவங்களில் தொடர்ந்து கொண்டுதான் உள்ளது.

ஆகவே தான் சுய நிர்ணய உரிமையைப் பெறுவதற்கான நடவடிக்கைகளை தொடர்ந்து முன்னெடுக்க வேண்டும். சுய நிர்ணய உரிமையை உறுதி செய்யாத வரைக்கும் இலங்கை அரசால் தமிழர்கள் மீதான இனப்படுகொலை தொடரும்.



**தோழர் செந்தில்,**
இளம்தமிழகம்

கடந்த 15 ஆண்டுகளில் நில அபகரிப்புக்கு எதிரான போராட்டம், வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோருக்கு நீதி கோரும் போராட்டம், தையிட்டி பௌத்த விகாரைக்கு எதிரானப் போராட்டம் போன்ற கோரிக்கை அடிப்படையிலான போராட்டங்கள் நடந்துள்ளன. அதுபோல் எழுக தமிழ், பொத்துவில் தொடக்கம் பொலிகண்டி வரை நடைப்பயணம் ஆகியன விடுதலை வேட்கையை வெளிப்படுத்தும் வகையில் நடைபெற்றன. அதன் தொடர்ச்சியாக தமிழ் மக்களுடைய விருப்பங்களை வெளிப்படுத்தும் விதமாக ஜனாதிபதித் தேர்தலில் தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்தும் ஒரு செயல் உத்தியை தமிழ் மக்கள் முன்னெடுத்துள்ளனர்.. தமிழ்ப் பொது வேட்பாளரை நிறுத்துவது இதுதான் முதல் முறையும் கூட. இதன் நோக்கம், தமிழ் மக்களை ஒரு தேசமாக திரட்டிக் காட்டுவதாகும். இதற்கு புலம்பெயர் தமிழர் மத்தியிலும் ஆதரவு பெருகியுள்ளது. கிட்டத்தட்ட இந்த செயலுத்தி அதன் இலக்கை எட்டியுள்ளதாகவே தெரிகிறது.

கடந்த 15 ஆண்டுகளில் சிங்கள அரசு கட்டமைப்பு வகைப்பட்ட இனவழிப்பு நடவடிக்கையை முன்னெடுத்து வருகின்றது. இதன் நோக்கம் என்னவெனில் தமிழர் தாயகம் என்பதை இல்லாமல் செய்வது, அதாவது தமிழ் மக்களது தேசிய தகு நிலையை இல்லாமல் ஆக்குவது. ஆனால் தாயகம் நிலம் கணிசமாக பறிபோனாலும், மொழியை இழந்தாலும் ஒரு தேசிய இனத்திடம் விடுதலைக்கான வேட்கை இருக்கிறதா? என்பது முக்கியமான கேள்வியாகும்.

இத்தனை அழிவுக்குப் பிறகும் இழப்புகளுக்குப் பின்னும் ஈழத்தமிழர்களின் விடுதலைத் தாகம் அடங்கிவிடவில்லை என்பதை வெளிப்படுத்துவதற்கான ஓர் ஆடுகளமாக இந்த தேர்தல் களத்தை ஈழத் தமிழர்கள் மாற்றியமைத்துள்ளனர். கடந்த மூன்று ஜனாதிபதித் தேர்தலைவிடவும், முள்ளிவாய்க்காலுக்குப் பின்னான இந்த 2024 தேர்தல் என்பது ஒரு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்ததாக மாறியிருக்கிறது. இந்த தேர்தல் களத்தை தம்முடைய இருப்பையும் தமது விருப்பத்தையும் வெளிப்படுத்தும் ஒரு களமாக தமிழ் மக்கள் பயன்படுத்தவுள்ளனர். தமிழ்ப்பொது வேட்பாளர் அதிக வாக்குகளைப் பெற்றுவிட்டார் என்றால், தமிழரசு கட்சி மற்றும் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணி கட்சிகள் பெரும் நெருக்கடிகளை சந்திக்கும் சூழல் உருவாகும்.

தமிழ் மக்கள் பொது வேட்பாளருக்கு வாக்களிப்பதன் மூலம் நீதியின் மீதான தம்முடைய பற்றையும் விடுதலை வேட்கையையும் உலகுக்கு அறிவிக்கவுள்ளனர். இன்னொரு அமைப்பு நோக்கில், தமிழ்த்தேசிய பொதுக்கட்டமைப்பு ஒரு மையமாக உருப்பெறும். மக்களின் விருப்பத்தை வெளிப்படுத்தும் மையமாக தமிழ்த்தேசிய பொதுக்கட்டமைப்பு உருப்பெறும் போது, அது வெளிநாட்டு அரசுகள் அணுகக் கூடிய தமிழர் தரப்பாக மாறுவதற்கு இந்த தேர்தல் முடிவுகள் வாய்ப்பை வழங்கும்.

கொரோனாவுக்குப் பின்னான காலத்தில் ஆப்கானை விட்டு அமெரிக்கா வெளியேறியது. உக்ரைனில் போர் நடைபெறுகின்றது. மேற்காசியாவில் பாலஸ்தீனத்தின் மீதான இஸ்ரேல் அரசின் இனவழிப்புப் போர் நடைபெறுகின்றது. இவையாவும் அமெரிக்க, சீன வல்லரசுகளின் போட்டியால் திறந்து விடப்பட்ட போர்க்களங்கள் தான். இந்த போட்டியினால் திறந்து விடப்படக்கூடிய போர்க்களங்கள் தாம் இந்தியப் பெருங்கடலில் இலங்கையும் பசுபிக் பெருங்கடலில் தாய்வானும். எனவே இப்படிப்பட்ட ஒரு வரலாற்று சூழலில் இந்த தேர்தல் முடிவுகள் வந்த பின், தமிழ்த்தேசிய பொதுக்கட்டமைப்பு ஒரு அரசியல் மையமாக உருப்பெறுவது ஓர் அவசர தேவையாகும்..

முள்ளிவாய்க்காலில் இழந்துபோன மையத்தை இன்றைய சூழலுக்கு ஏற்ற வடிவத்தில் உருவாக்குவதற்கான ஒரு பரிசோதனை முயற்சிதான் பொதுக்கட்டமைப்பு என்ற அமைப்பு வடிவமும், பொது வேட்பாளர் என்ற செயலுத்தியுமாகும்..

தமிழர் தாயகம் தமிழீழத் தாயகம்

தொடர்ச்சி 16ஆம் பக்கம்

MAISON DU TAMIL EELAM
Centre de Protection des Droits du Peuple Tamoul
28 Place de la Chapelle 75018 Paris FRANCE Tél : +33 6 52 72 58 67 Email : mte.france@gmail.com

*பாரிஸ்- 14.09.2024*

## எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டு - ஒன்றாவோம்.

இன்று ஐக்கிய நாடுகள் சபையின் 57 ஆவது கூட்டத்தொடர் ஆரம்பித்து இருக்கும் காலம். சிறீலங்காவின் தேர்தல் காலம் - உலகநாடுகளின் பார்வை அனைத்தும் சிறிலங்கா என்ற நாட்டை சுற்றி வலம் வந்து கொண்டிருக்கின்ற காலம்.

ஈழத் தமிழர்கள், தொடர்ச்சியாக 75 வருடங்களாக, பல சிங்கள வேட்பாளருக்கு வாக்களித்து வந்திருக்கிறார்கள் - தமிழ் மக்களுக்கான பிரச்சினைகள் தீர்க்கப்படும் என்ற நம்பிக்கையுடன்.

ஆனால் போரில் நடந்த இனவழிப்பில் இழந்ததை விட இந்த 15 ஆண்டு காலத்தில் எமது அடையாளங்கள், நிலங்கள் பௌத்தமயமாக்கத்துக்கும், வனவளத்திற்கும், தொல்பொருள் திணைக்களத்திற்கும் தொடர்ச்சியாக இழந்து கொண்டு இருக்கின்றோம்.

இன்று அரசியல் கட்சிகளால் எமது சமுதாயம் பிரிக்கப்பட்டு எமது பலம் சிதைக்கப்பட்டு பல பிரிவுகளாக சிதறுண்டு இருக்கிறோம். எங்கள் இந்த பிரிவினையை, சிங்கள அரசு திட்டமிட்ட படி தமிழரை, தமிழ் தேசத்தை முற்றாக அழிக்கும் செயற்பாட்டில் முன்னேறிக் கொண்டு தான் இருக்கிறது.

சர்வதேச நாடுகள் இதுவரை காலமும் பார்வையாளராக கட்டம் கட்டமாக அறிக்கைகளை விட்டு கொண்டு நடந்த, நடந்து கொண்டிருக்கும் தமிழின அழிப்பை தடுப்பதுக்கு தீர்க்கமான தீர்வுகளை முன்வைத்ததாகவேயில்லை.

தமது புவியில் நலம் சார் செயல்பாடுகளை செயல்படுத்திக்கொண்டு இருக்கிறார்கள். இந்த சூழல் தொடருமாக இருந்தால் நாம் முற்றாக அழிக்கப்பட்டு விடுவோம் என்ற ஆபத்தான கட்டத்தில், தாயகத்தில் இருந்து தமிழ் அரசியல் கல்வியாளர்கள், தமிழ் சிவில் சமூக அமைப்புகள், ஒன்று சேர்ந்து மீண்டும் தமிழ் மக்களின் இணைவை உருவாக்க பல திட்டமிடல்களுடன் பயணிக்க ஆரம்பித்தார்கள்.

இந்த காலப்பகுதியில் சிறிலங்காவுக்கான சனாதிபதி தேர்தல் அறிவிக்கப்பட்டது. இந்தத் தேர்தல் எமக்குரியது அல்ல, சிறிலங்காவின் ஒற்றை ஆட்சி முறையை நாம் ஏற்றுக் கொண்டவர்களும் அல்ல, சிறிலங்கா யாப்பு எங்களுடையதும் அல்ல, தமிழ் மக்கள் ஒரு தேசிய இனமாக ஏற்றுக்கொள்ளப் பட்ட யாப்பும் இல்லை.

சிங்களமும், பவுத்தமும்தான் - முதன்மை என்று காட்டப்படுகிறது. இதை அனைத்துலகத்திடம் ஒன்று பட்ட தமிழர் குரலாக இந்த ஜனாதிபதி தேர்தலை நாம் பயன்படுத்த வேண்டும் என்று தமிழ் பொதுக் கட்டமைப்பை உருவாக்கி, தமிழருக்கான பொது பிரதிநிதியாக, தமிழரின் அடையாளமாக திரு அரியநேத்திரன் நிறுத்தப்பட்டுள்ளார்.

தமிழருக்கான தேர்தல் அறிக்கை தமிழ் மக்களின் முழு பிரச்னைகளும் பிரச்சினைகளும் உள்வாங்கப்பட்டு வெளிவந்தது. அந்த அறிக்கையை நாம் முழுதாக வரவேற்கிறோம்.

‘சங்கே முழங்கு சங்கே முழங்கு’’
எங்கள் வாழ்வும், எங்கள் வளமும், மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு
எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார், இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டு
"பொங்கு தமிழுக்கு இன்னல் விளைந்தால் சங்காரம் நிசம் என்று சங்கே முழங்கு ’’

என்று புரட்சி கவிஞர் பாரதிதாசன் பாடல் வரிகளை எழுதி வைத்தார்.

அதற்கு ஏற்றால் போல் தமிழருக்கான தேர்தல் சின்னமாக சங்கு எமக்கு அமைந்து இருக்கிறது. “ எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டு’’ என்ற சிந்தனை வரிகள் அடிப்படையில் எங்கள் குரல் சர்வதேசத்துக்கு ஓங்கி ஒலிக்கவேண்டிய காலம் இது.

இந்த காலத்தை - சரியான வழியில் ஈழத் தமிழர்கள், சிறிலங்காவில் வாழும் தமிழ் பேசும் மக்கள், மலையகத்தில் தொடர்ச்சியாக ஏமாற்றப்பட்டுக்கொண்டிருக்கும் மலையகத் தமிழர்கள் எல்லோரும் இந்த சனாதிபதி தேர்தலை பயனுள்ளதாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

சிறிலங்காவும், சர்வதேசமும் புரிந்து கொள்ள வேண்டும் - அழிக்கப்பட்டு கொண்டிருக்கும் தமிழர்கள் அவர்கள் வாழ்வும் வளமும் பாதுகாக்கப்பட வேண்டியது என்பதை.

இந்த சூழலில் தமிழ் பொது கட்டமைப்பின் தேர்தல் அறிக்கையை வரவேற்பத்தோடு இந்த தேர்தலை தமிழரின் குரலுக்கான தேர்தல் என்பதையும் நாம் உறுதிப்படுத்திக் கொள்வோம்.

திலீபன் பசியுடன் ‘மக்கள் புரட்சி வெடிக்கட்டும் ’’ என்று கூறி தமிழுக்காகவும் தமிழருக்காகவும் தனது இன்னுயிரைத் தியாகம் ஆக்கிய காலம்.

எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார் இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டு - ஒன்றாவோம்.

**சங்குச் சின்னத்தை ஆதரித்து ஒன்றிணைவை பறைசாற்றுவோம்.**

நன்றி,
**தமிழீழ மக்கள் பேரவை-பிரான்ஸ்**

## வாக்களிப்பில்... தொடர்ச்சி ...

தொடர்புகளை குறைக்கின்ற ஒன்றாக உள்ளது. ஒரு தேர்தல் மாவட்டத்திற்கு பல உறுப்பினர்கள் உள்ளமையினாலும் தேர்தல் மாவட்டங்கள் நிலப்பரப்பில் பெரியனவாகவும் இருப்பதனாலேயே இந்நிலை தோன்றுகின்றது. இது உறுப்பினர்கள் தமது பொறுப்பினை தட்டிக் கழிப்பதற்கான வாய்ப்புக்களை உருவாக்குகின்றது. இன்னொரு பக்கத்தில் பிரதிநிதித்துவம் கட்சிக்கு மட்டுமே தவிர மக்களுக்கு அல்ல என்ற நிலையையும் தோற்றுவிக்கின்றது என்றும் விகிதாசார தேர்தல் முறைமைக்கு எதிராக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வருகின்றன. அத்துடன் விகிதாசார தேர்தல் முறை வாக்காளர்கள் இலகுவில் விளங்கிக்கொள்ள முடியாத தேர்தல் முறையாக காணப்படுகின்றது. இதனால் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை அதிகரிக்கின்றது என்ற கருத்தும் நிலவுகின்றது. இதன் நம்பகத் தன்மையையும் எம்மால் உணர்ந்து கொள்ளக் கூடியதாக உள்ளது.

### நிராகரிக்கப்பட்ட வாக்குகள்

விகிதாசார தேர்தல் முறை கணித ரீதியில் (கணிப்பீட்டு முறை) அமைந்துள்ளதால் பாமர மக்கள் புரிந்து வாக்களிப்பதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்குகின்றார்கள். வாக்குப் பத்திரத்தையும் வாக்களிப்பு முறையையும் விளங்கிச் செயற்படுவதில் பலர் இடர்பாடுகளை எதிர்கொள்கின்றனர். விகிதார தேர்தல் முறைமையின் கீழ் கடந்தகாலத்தில் இடம்பெற்ற பல தேர்தல்களில் மலையகம் உள்ளிட்ட நாட்டிலுள்ள வாக்காளர்கள் பலரின் கணிசமான வாக்குகள் நிராகரிக்கப்பட்டுள்ளன. உதாரணமாக 2000 மாம் ஆண்டில் இடம்பெற்ற தேர்தலில் மத்திய மாகாணத்தில் 92 ஆயிரத்து 616 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. அதேவேளை பதுளை மாவட்டத்தில் 28 ஆயிரத்து 189 வாக்குகளும், இரத்தினபுரி மாவட்டத்தில் 30 ஆயிரத்துக்கு அதிகமான வாக்குகளும் நிராகரிக்கப்பட்டிருந்தன. இதேவேளை 2001 ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் மத்திய மாகாணத்தில் 89 ஆயிரத்து 925 வாக்குகளும், இரத்தினபுரி மாவட்டத்தில் 30 ஆயிரத்து 483 வாக்குகளும், பதுளை மாவட்டத்தில் 26 ஆயிரத்து 626 வாக்குகளும் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் பட்டியலில் உள்ளடங்குகின்றன.

1989 ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலில் நாடளாவிய ரீதியில் மூன்று இலட்சத்து 65 ஆயிரத்து 553 வாக்குகள் செல்லுபடியற்றதாகியமையும் குறிப்பிடத்தக்கதாகும். இது அளிக்கப்பட்ட மொத்த வாக்குகளில் 6.13 வீதமாகும். இத்தேர்தலின்போது கொழும்பு மாவட்டத்தில் 32 ஆயிரத்து 273 வாக்குகளும், நுவரெலியா மாவட்டத்தில் 13 ஆயிரத்து 600 வாக்குகளும், குருநாகல் மாவட்டத்தில் 34 ஆயிரத்து 212 வாக்குகளும் நிராகரிக்கப்பட்டிருந்தன. இதேவேளை கடந்த 2013 ம் ஆண்டு இடம்பெற்ற மூன்று மாகாண சபைகளுக்குமான தேர்தலில் மத்திய மாகாணத்தில் 82 ஆயிரத்து 161 வாக்குகள் நிராகரிக்கப்பட்டிருந்தன. இதனடிப்படையில் நுவரெலியா மாவட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளில் 7.8 சதவீதமானவையும், கண்டி மாவட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளில் 5.78 சதவீதமானவையும், மாத்தளை மாவட்டத்தில் அளிக்கப்பட்ட வாக்குகளில் 6.37 சதவீதமானவையுமே நிராகரிக்கப்பட்ட வாக்குகளாகும். இதேவேளை இம்மூன்று மாவட்டங்களிலும் முறையே மூன்று இலட்சத்து 54 ஆயிரத்து 820 வாக்குகள் நுவரெலியா மாவட்டத்திலும், 6 இலட்சத்து 77 ஆயிரத்து 245 வாக்குகள் கண்டி மாவட்டத்திலும், 2 இலட்சத்து 40 ஆயிரத்து 604 வாக்குகள் மாத்தளை மாவட்டத்திலும் அளிக்கப்பட்டிருந்தது.



இதேவேளை 2015 ம் ஆண்டு ஜனாதிபதி தேர்தலில் மைத்திரிபால சிறிசேன 62 இலட்சத்து 17 ஆயிரத்து 162 வாக்குகளைப் பெற்று வெற்றியீட்டினார். இது செல்லுபடியான வாககுகளில் 51.28 சதவீதமாகும். இவரை எதிர்த்துப் போட்டியிட்ட ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டணியின் வேட்பாளர் மஹிந்த ராஜபக்ச 57 இலட்சத்து 68 ஆயிரத்து 090 வாக்குகளைப் பெற்று தோல்வியைத் தழுவினார். இது மொத்தமாக செல்லுபடியான வாக்குகளில் 47.58 சதவீதமாகும். இத்தேர்தலில் கணிசமான வாக்குகள் நிராகரிப்புக்கு உள்ளாகியிருந்தமையும் இங்கு நோக்கத்தக்கதாகும்.

### ஜனநாயகத்துக்கு வலுசேர்ப்பு

இந்நிலையில் 2020 ம் ஆண்டு இடம்பெற்ற பொதுத்தேர்தலில் பதிவு செய்யப்பட்ட வாக்காளர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 62 இலட்சத்து 63 ஆயிரத்து 885 ஆகவிருந்த நிலையில் ஒரு கோடியே 23 இலட்சத்து 43 ஆயிரத்து 302 பேர் வாக்களித்திருந்தனர். இவற்றுள் செல்லுபடியான வாக்குகள்ஒரு கோடியே15 இலட்சத்து98ஆயிரத்து 929 ஆகும். இத்தேர்தலில் நிராகரிக்கப்பட்ட வாக்குகளின் எண்ணிக்கை 7 இலட்சத்து 44 ஆயிரத்து 373 ஆகும். இதேவேளை 2019 ம் ஆண்டு இடம்பெற்ற ஜனாதிபதி தேர்தலில் கோத்தபாய ராஜபக்ச பெற்றுக் கொண்ட வாக்குகளின் எண்ணிக்கை 69 இலட்சத்து 24 ஆயிரத்து 255 ஆகும். இத்தேர்தலில் சஜித் பிரேமதாச 55 இலட்சத்து 64 ஆயிரத்து 239 வாக்குகளையும், அநுரகுமார திசாநாயக்க 4 இலட்சத்து 18 ஆயிரத்து 553 வாக்குகளையும் பெற்றுக் கொண்ட நிலையில் கோத்தபாய நாட்டின் ஜனாதிபதியாக தெரிவானார். இத்தேர்தலில் ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 452 வாக்குகள் நிராகரிக்கப்பட்டன. இதில் வேடிக்கை என்னவென்றால் அரசாங்க உத்தியோகத்தர்களின் தபால் மூல வாக்குகளும் கடந்தகால தேர்தல்களில் கணிசமாக நிராகரிப்பிற்கு உள்ளாகியிருந்தன.

இதனடிப்படையில் நோக்குகையில் விகிதாசார தேர்தல் முறைமையின் கீழ் நிராகரிப்பிற்கு உள்ளான வாக்குகளின் தொகை தொடர்ச்சியாகவே அதிகரித்து வருகின்றமையை அவதானிக்க முடிகின்றது. இந்நிலையில் இம்முறை இடம்பெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் 39 வேட்பாளர்கள் போட்டியிடும் நிலையில் வாக்குச் சீட்டின் நீளமும் அதிகமாகவுள்ளது. அத்தோடு வாக்காளர்கள் விருப்பத் தெரிவினையும் இடவேண்டியுள்ளது. எனவே வாக்காளர்கள் வாக்குகளை முறையாக வாக்குச் சீட்டில் அடையாளமிடாத நிலையில் அது நிராகரிப்புக்கு உள்ளாகும் வாய்ப்பு ஏற்படலாம். எனவே இது குறித்து வாக்காளர்கள் அவதானமாக இருக்க வேண்டும். குறிப்பாக மலையக மக்கள் இது தொடர்பில் விசேட கவனம் செலுத்துதல் வேண்டும். படித்த இளைஞர் யுவதிகள், அரசியல் தொழிற்சங்கவாதிகள் போன்றோர் வாக்காளர்களை உரியவாறு வாக்களிக்கச் செய்யும் நோக்கில் விழிப்பூட்டல் செயற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும். இதன் மூலம் நிராகரிப்புக்கு உள்ளாகும் வாக்குகளின் எண்ணிக்கையைக் குறைத்து ஜனநாயகத்துக்கு வலுசேர்க்க முடியும் என்பதே உண்மையாகும்.

• • •

## ஒற்றிமையே ... தொடர்ச்சி ...

நாங்கள் கடந்த காலத்தில் சுட்டிக்காட்டிய விடயங்களை ஒக்லேன்ட் நிலையம் தனது ஆய்வாக வெளியிட்டுள்ளது. கிழக்கு மாகாணத்தில் எவ்வாறான நிலைமைகள் காணப்படுகின்றது என்பதை கிழக்கு மாகாணத்தின் திருகோணமலை மாவட்டத்தினை ஆய்வுக்குட்படுத்திப ல விடயங்களை வெளிக்கொணர்ந்துள்ளது.

இவ்வாறான விடயங்களை நாங்கள் தடுப்பதற்கு அல்லது அவ்வாறான சம்பவங்கள் எங்களுக்கு தொடர்ச்சியாக நடத்தப்படுகின்றது என்பதை வெளிக்காட்டுவதற்கு ஒரு சந்தர்ப்பமாக இந்த தமிழ் பொதுவேட்பாளர் உள்ளார் என்பதை இன்று கிழக்கு தமிழர்கள் உணர்ந்திருக்கின்றார்கள்.அதன்காரணமாகவே மட்டக்களப்பிலும் திருகோணமலையிலும் அம்பாறையிலும் நடைபெற்ற பொதுக்கூட்டங்களில் ஆயிரக் கணக்கில் மக்கள் அணிதிரண்டிருக்கின்றார்கள்.

கிழக்கு மாகாண மக்களின் நீண்டகால ஆதங்கமாக இருந்த விடயமாக இந்த பொது வேட்பாளர் காணப்படுவதை அவதானிக்க முடிகின்றது. குறிப்பாக தமிழ் மக்களின் சார்பில் களமிறக்கபட்பட்டுள்ள பொதுவேட்பாளருக்கு கிழக்கு மாகாணத்தினைப்பொறுத்த வரையில் பாரியளவில் ஆதரவுத்தளம் உள்ளதை காண முடிகின்றது. வலிந்துகாணாமல்ஆக்கப்பட்ட உறவுகள், கிழக்கிலங்கை இந்துக்குருமார் ஒன்றியம்,இந்து இளைஞர் பேரவை,கிழக்கு பல்கலைக்கழக மாணவர்கள் சமூகம்,கால்நடை பண்ணையாளர்கள் சமூகம்,விவசாய அமைப்புகள்,மீனவர்கள் அமைப்புகள்,கிராமிய மட்ட அமைப்புகள்,விளையாட்டுக்கழகங்கள் என பல்வேறுதரப்பினரும் இன்று ஆதரவளித்துவருவதை காணமுடிகின்றது.

கிழக்கு மக்கள் சிங்கள வேட்பாளர்களுக்கு அளிக்கும் வாக்குகள் தமது தலையில் தாங்களே மண்ணை அள்ளிப்போடும் நிலைமையே காணப்படுகின்றது. கிழக்கில் சிங்கள பௌத்த பேரினவாதத்தினால் முன்னெடுக்கப்படும் அனைத்து பிரச்சினைகளையும் முன்னிறுத்தியும் குறித்த பிரச்சினைகளுக்கான தீர்வினையும் கோரி முன்கொண்டுவரப்பட்டுள்ள தமிழ் பொதுவேட்பாளருக்கு கணிசமான வாக்குகளை வழங்குவதன் மூலமே கிழக்கு மாகாணத்தில் கொண்டுவரப்பட்டுள்ள ஒரு அங்கீகாரத்தினை தமிழ் மக்கள் வழங்கியுள்ளார்கள் என்று கூறமுடியும். மாறாக தமிழ் பொதுவேட்பாளருக்கு வாக்குகள்அளிக்காமல் சிங்கள வேட்பாளர்களுக்கு அளிக்கும் வாக்குகள் என்பது கிழக்கில் சிங்கள பௌத்த பேரினவாத சக்திகள் முன்னெடுக்கும் அனைத்து வேலைத்திட்டங்களுக்கும் தமிழர்கள் வழங்கும் அங்கீகாரமாகவே அமையும்.அந்த அங்கீகாரத்தினைதமிழர்கள்வழங்குவார்களானால் அடுத்துவரும் ஐந்து வருடத்திற்கு கிழக்கில் முன்னெடுக்கும் எந்தவித அத்துமீறல்களையும் தடுக்கமுடியாத நிலைமையே ஏற்படும்.

இவ்வாறான நிலையில் வடக்கு கிழக்கில் வாழும் ஒவ்வொரு தமிழர்களும் தமது பொறுப்பினை உணர்ந்து செயற்பட வேண்டும் என்பதுடன் தமிழ் பொதுவேட்பாளருக்கு வாக்களிக்கும் வீதத்தினையும் அதிகரிக்கவேண்டிய பாரிய பொறுப்பு தமிழினத்திற்கு எழுந்துள்ளது. வடகிழக்கில் தமிழர்கள் பொதுவேட்பாளருக்கு வாக்களிக்காவிட்டால் அது தமிழர்களின் பிரச்சினைகள் அனைத்தையும் ஒரு குழிக்குள் போட்டு மூடுவதற்கு சமமானதாக அமையும். இதனை உணர்ந்து தமிழர்கள் செயற்படவேண்டும். அதற்கான தளத்தினை தமிழ் தேசிய சக்திகள் ஏற்படுத்தவேண்டும்.

• • •

## தோழர் தியாகு ... தொடர்ச்சி ...

வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களுக்கு நீதி, சிறையில் அடைபட்டிருக்கும் போர்க் கைதிகள் மற்றும் அரசியல் கைதிகளுக்கு விடுதலை, தமிழர் தாயகத்திலிருந்து சிங்களப் படை நீக்கம், வன்பறிப்பு நீக்கி நிலவுரிமை மீட்பு, குடியாட்சிய அரசியல் தீர்வு... இந்தக் கோரிக்கைகளை எல்லாம் கண்டுகொள்ளாமல் வரலாற்றின் புதைகுழியிலிருந்து 13ஆம் திருத்தச் சட்டத்தைத் தூக்கி வந்து 'மோடி' வித்தை காட்ட முற்பட்டால் தமிழ்மக்கள் ஏமாற மாட்டார்கள் என்று 'சம்பந்த'ப்பட்ட சகலருக்கும் அறிவித்துக் கொள்வதுதான் தமிழ்ப் பொதுவேட்பாளர் களங் கண்டிருப்பதாகும்.

4) இருதுருவ உலகம் ஒருதுருவ உலகமாகி மீண்டும் பலதுருவ உலகமாகி விட்டது என்று பன்னாட்டுச் சூழலுக்கு விளக்கம் தரப்படுகிறது. இந்தப் பலதுருவம் என்பது அமெரிக்கா, சீனம், உருசியம், ஐரோப்பா, (தெற்காசியாவைப் பொறுத்த வரை) இந்தியா என்றுதான் விளக்கப்படுகிறது. ஆனால் பன்னாட்டு அரசியலில் உலகெங்கும் நடைபெறும் தேசிய விடுதலைக்கும் குடியாட்சியத்துக்கும் குமுக முன்னேற்றத்துக்குமான இயக்கங்களும் அரசுகளற்ற தேசங்களும் கொண்டுள்ள வகிபாகத்தைத் தமிழ்ப் பொதுவேட்பாளர் உணர்த்தி நிற்கின்றார். வல்லரசுகளின் படை வலிமை, பொருள் வலிமை, சூழ்ச்சி வலிமை... இதற்கெல்லாம் முகங்கொடுக்கும் அறவலிமை அரசுகளற்ற தேசங்களுக்கு உண்டு. தாயக மீட்புக்கான பாலத்தீன மக்களின் வீரப் போர் உலக அரசியலில் ஒரு தீர்மானிக்கும் அற ஆற்றலாக வளர்ந்து வருகிறது. இவ்வகை அறம்சார் அரசியல் ஆற்றலின் பெயராளர்தாம் தமிழ்ப் பொது வேட்பாளர்.

5) இனவழிப்பினால் தமிழீழ மக்களின் உரிமைப் போராட்டத்தை நசுக்கி விட முடியவில்லை. எழுக தமிழ், பொத்துவில் பொலிகண்டி, அதன் தொடர்ச்சியாகத்தான் இப்போது தமிழ்ப்பொது வேட்பாளர் களம் கண்டுள்ளார்... உலகத்தின் முன்னோடிப் போராட்டக் களங்களில் பாலத்தீனம், குர்திஸ்தானம், காசுமீரம் போல் தமிழீழத்துக்கும் இடம் உண்டு என்ற திசையில் ஒரு புதுமையான நகர்வுதான் தமிழ்ப் பொதுவேட்பாளரும், அவருக்கான தேர்தல் அறிக்கையும்!

## வன்னி அரசு ... தொடர்ச்சி ...

வேண்டுகிறோம்.

முழங்கட்டும் சங்கு, அது கொழும்புக்கு மட்டுமல்ல இந்தியாவுக்கும் அமெரிக்கா,அதோடு சீனாவுக்கும் கேட்கட்டும்.

## இஸ்ரேலுடன் ... தொடர்ச்சி ...

தெரிவித்திருந்தது.

இறப்பது ஒரு முறை தான் எனவே இஸ்ரேலுக்கு சென்று அதிக பணத்தை சம்பாதிக்க இந்தி யர்கள் விரும்புகின்றனர் என இந்திய ஊடகம் தெரிவித்துள்ளது.

இந்தியாவில் மாதம் ஒன்றிற்கு 150 தொடக்கம் 300 டொலர்களை சம்பாதிக்கும் பணியாளர்கள் இஸ்ரேலில் 1600 டொலர்களை சம்பாதிக்க முடியும்.

இந்தியர்களின் பணி தொடர்பில் தாம் மிகவும் திருப்த்தியடைந்துள்ளதாக இந்தியாவில் உள்ள இஸ்ரேல் தூதரகம் தெரிவித்துள்ளது. இஸ்ரேல் வழங்கும் ஊதியம் தொடர்பில் இந்திய பணியாளர்களும் திருப்த்தியடைந்துள்ளதாக அது மேலும் தெரிவித்துள்ளது.

இதனிடையே, 10 பில்லியன் டொலர் கள் பெறுமதியில் இந்தியாவும், இஸ்ரேலும் இணைந்து மகாராட்சிரா மாநிலத்தில் மென் கடத்திகள் தயாரிக்கும் நிறுவனம் ஒன்றை ஆரம் பிக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த வருடம் ஒக்டோபர் மாதம் இஸ் ரேல் மீதான ஹமாஸின் தாக்குதல் மற்றும் இஸ்ரேல் காசா பகுதி மீது மேற்கொண்டுவரும் தாக்குதல்களைத் தொடர்ந்து இஸ்ரேலில் பணி யாற்றிய வெளிநாட்டு பணியாளர்கள் வெளி யேறியதால் இஸ்ரேலில் பணியாளர்களுக்கு பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

## தோழர் செந்தில் ... தொடர்ச்சி ...

என்று முழங்கட்டும் சங்கு. அது கொழும்புக்கு மட்டுமல்ல சென்னைக்கும் தில்லிக்கும் வாசிங் கடனுக்கும் பிஜிங்குக்கும் கேட்கட்டும்.

## தியாகதீபம் ... தொடர்ச்சி ...

கோரிக்கை விடுத்து வருவதை ஏற்க முடியாது என தெரிவித்துள்ளார்.

இதேவேளை, தேர்தல்காலம் என்பதால், அதைக் கருத்திற் கொண்டு அஞ்சலிக்குத் தடை விதிக்கவேண்டும் என்றும் காவல் துறை யினர் கோரிக்கை விடுத்தனர். இதற்கு, தேர்தல் காலத்தின்போது வாகனப் பேரணிகள் நடத்து வதற்கு மட்டுமே தடை விதிக்க முடியும் என்று தெரிவித்த நீதிவான் அவ்வாறு வாகனப் பேரணிகள் இடம்பெறாது என்பதற்கான உத்தர வாதங்களை எதிர்த்தரப்பினரிடம் இருந்து பெற்றுக்கொண்டார். அத்துடன் வழக்கை நீதிவான் முடித்து வைத்துள்ளார்.

“மேலும், ஒலிபெருக்கிகளை பயன் படுத்த அனுமதி வழங்கும் அதிகாரம் காவல் துறையினரிடம் இருப்பதால், இது தொடர்பில் காவல்துறையினரே இறுதி முடிவை எடுக்கலாம் எனவும் நீதிபதி அறிவுறுத்தியுள்ளமை குறிப் பிடத்தக்கது.

## அமெரிக்கா ... தொடர்ச்சி ...

தனது சொத்துக்களை விற்பனை செய்வ தற்கு முற்பட்டுள்ளது. ஆபிரிக்காவில் உள்ள தனது 2.4 பில்லியன் டொலர்கள் பெறுமதியான சொத் துக்களை விற்பனை செய்த வற்கு செல் நிறுவனம் திட்டமிட்டுள்ளதாக கடந்த ஜனவரி மாதம் தெரிவித்திருந்தது.

சுற்றாடலுக்கு ஏற்பட்டுள்ள பாதிப்புக் களுக்கான இழப்பீடுகளை வழங்காது செல் நிறுவனத்தின் சொத்துக்களை விற்பனை செய் வதற்கு நைஜீரியா அரசு அனுமதிகளை வழங்கக் கூடாது என அனைத்துலக மன்னிப்புச்சபை உட்பட பல மனித உரிமை அமைப்புக்கள் கோரிக்கைவிடுத்துள்ளன.

80 வருடங்களுக்கு மேலாக நைஜீரியாவின் பிரித்தானியாவின் நிறுவனம் எண்ணை அகழ்வுப் பணிகளை மேற்கொண்டு வந்திருந்தது. 1937 ஆம் ஆண்டு தொடக்கம் பிரித்தானியா நிறுவனம் மேற்கொண்டுவரும் நடவடிக்கைகளால் இந்த பிராந்திய மக்களின் வாழ்வாதாரம் பாதிக்கப் பட்டு வந்துள்ளது.

மீனவர்கள் மற்றும் விவசாயிகள் உட்பட 13,000 பேருக்கு பிரித்தானியாவின் செல் நிறு வனம் இழப்பீடு வழங்கவேண்டும் என பிரித் தானியாவின் நீதிமன்றமும் கடந்த வருடம் தீர்ப்பு வழங்கியிருந்தது.

## தயாராகியுள்ள ... தொடர்ச்சி ...

தீர்வு இல்லை. புதிய அரசியலமைப்பை உரு வாக்குவோம். அதுவரையில் 13 ஐ நடைமுறைப் படுத்தலாம் என்பதுதான் அவர்களது நிலைப்பாடு! அவ்வாறு புதிதாக உருவாக்கப்படும் அரசியல மைப்பில் இப்போது இருக்கக்கூடிய மாகாண சபை கூட காணாமல் போகக்கூடிய ஆபத்து இருக்கின்றது. ஏனெனில் அடிப்படையில் ஜே.வி. பி. மாகாண சபை முறைக்கு எதிரான கட்சி!

வடக்கு கிழக்கு மாகாணங்களில் இணைப்பை சட்ட ரீதியாக பிரிப்பதில் ஜேவிபி தான் முன்னின்றார்கள். அதனைவிட, சுனாமிக்கு பின்னர் உருவாக்கப்பட்ட சுனாமி கட்டமைப்பை தகர்ப்பதில் கூட அவர் தான் செயல்பட்டார்கள். நீதிமன்றத்தின் மூலமாக ஒரு வழக்கை தொடர்ந்து அதன் மூலமாக அந்த கட்டமைப்பு இல்லாதொழித்தார்கள். அரசியல் ரீதியாக மட்டுமின்றி மனிதாபிமான ரீதியாகவும் தமிழ் மக்களுக்கு எதுவும் கிடைத்துவிடக்கூடாது என்பதில் அவர்கள் முனைப்பாக இருந்து செயல்பட்டார்கள் என்பதற்கு இந்த சம்பவம் ஒரு உதாரணம்

இந்த பின்னணியில் இந்த பிரதான வேட் பாளர்களில் ஒருவரை தான் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும் என்று சிலர் கூறுகின்றார்கள். இந்த மூன்று பேருமே இன நெருக்கடியில் அக்கறை காட்டுபவர்களோ அல்லது அதற்கான நியாயமான தீர்வு ஒன்றை வழங்க கூடியவர்களாகவோ இல்லை என்பது வெளிப்படை!

இந்த நிலைமையில் தான் தமிழ் பொது வேட்பாளர் என்ற கருத்து பலம் பெற்றிருக் கின்றது. கடந்த காலத்தில் பெற்றுக்கொண்ட அனுபவம் மட்டுமின்றி, குறிப்பிட்ட மூன்று வேட்பாளர்களுடைய செயற்பாடுகள் கூட, அவர்கள் பிரச்சனைக்கு ஒரு தீர்வை முன் வைக்கமாட்டார்கள் என்பதை உறுதிப்படுத்துவ தாக இருக்கின்றது. இந்த நிலமையில் தமிழ் மக்களுக்கு இருக்கக்கூடிய மாற்றுத் தெரிவாக பொது வேட்பாளர் என்பதை விட வேறு என்னவாக இருக்கலாம்.

• • •



## பொது வேட்பா ... தொடர்ச்சி ...

கலாச்சாரத்துக்கு போக தயாராக இல்லை. தமிழ் மக்களையும் வாக்குகளுக்காக விலை போவதற்கான கலாச்சாரத்துக்குள் இழுக்கத் தயாரில்லை என்பதில் உறுதியாக நிற்கின்றோம்.

மட்டக்களப்பில் நடந்த கூட்டத்தில் மக்கள் பெரும் திரளாக கலந்து கொண்டிருந்தனர். மட்டக்களப்பில்கூட்டங்களை நடத்துவதற்குஆரம்பத்தில் பொது வேட்பாளர் அணியினர் அச்சப்பட்டார்கள். ஒரு பக்கத்தில் பிள்ளையான் மற்ற பக்கத்தில் சாணக்கியன் அணியினர் இருந்தனர். ஆனால் அதையும் கடந்து மட்டக்களப்பில் மக்கள் கூடியுள்ளனர். அதே நேரம் மக்களும் சுதந்திரமாக அரசியல் செய்யத் துவங்கி இருக்கின்றார்கள். வடபகுதியில் அதிக கூட்டங்கள் நடந்தன. பெரிய கூட்டங்கள் என்று கிளிநொச்சியில் நடந்தது. கிட்டு பூங்காவில் ஒரு கூட்டம் பெரிய அளவில் நடைபெற்றது. அதைவிட கிராமங்களில் சிறிய அளவில் கூட்டங்கள் நடந்த போது மக்கள் ஆர்வத்துடன் கலந்துகொண்டனர்.

'செப்டம்பர் 21 தேர்தல் முடிந்த பிறகு நாங்கள்எவ்வாறு எங்களைமீளுருவாக்கம் செய்யப் போகிறோம். தமிழ் தேசிய பொதுக்கட்டமைப்பு என்பது இன்னும் ஒரு பரிமாணத்தில் புலம்பெயர் தேசத்தவர்களையும் நாட்டில் உள்ளவர்களையும் இணைத்து எவ்வாறு இன்னும் ஒரு தேசிய பரிமாணத்திற்கு வரும். அதன் மூலம் தமிழ் மக்களுடைய தேசத்தை கட்டி எழுப்புவதற்கான பலன் கொண்ட ஒரு சமூக இயக்கமாகவும் அரசியல் இயக்கமாகவும் மாறும் என்ற விடயங்கள் மக்களுக்கு தெளிவு படுத்தப்பட்டது. சிலபேர் பல லட்சம் வாக்குகள் வரவேண்டும் என்று எதிர்பார்க்கின்றனர். அது வரவேண்டும் ஆனால் வராவிட்டால் அது எங்களுக்கு தோல்வி அல்ல.

தமிழரசு கட்சியின் முடிவு சம்பந்தமாக கடுமையான சங்கடங்கள் வந்துள்ளன என்று நினைக்கின்றேன். தமிழரசு கட்சியினுடைய எதிர் காலம் சம்பந்தமாக தேர்தலுக்கு பின்பு தமிழரசு கட்சியின் ஆதரவாளர்கள் முடிவெடுப்பார்கள்.

**சர்வதேச சமூகத்தினுடைய கவனத்தை ஈழத் தமிழர் பிரச்சினையின்பால் ஈர்ப்பதற்கு இந்த பொது வேட்பாளர் எந்த வகையில் உதவப் போகின்றார்?**

சர்வதேச சமூகம், சிங்கள சமூகம், தமிழ் சமூகம் கூட சிறுபிள்ளை விளையாட்டு என்பது போன்று தான் ஆரம்பத்தில் யோசித்தார்கள். அல்லது தாங்கள் நினைக்கின்றவரை ஜனாதிபதி ஆக்குவதற்கு தமிழ் மக்களுடைய வாக்குகள் அவர்களுடைய எண்ணிக்கையை கூட்டக்கூடிய ஒரு முக்கிய விடயமாக இருக்கும். எனவே இந்த விடயத்தில் தமிழ் மக்கள் அவர்களுக்கு வாக்களித்துதாங்கள்நினைக்கின்றவர்களைமேலே கொண்டுவர வேண்டும் என்ற பல வாதங்கள் வைக்கப்பட்டன. ரணில் விக்ரமசிங்க அவர்கள் ஆரம்பத்தில் யாழ்ப்பாணம் வந்திருந்தபோது முன்னாள் நீதியரசரும் பிரதம முதலமைச்சருமான விக்னேஸ்வரன் ஐயா வீட்டை போய் கதைக்கும் போது 'உங்களால் தமிழ் வேட்பாளர் ஒருவரை போட முடியுமா உங்களுக்கு அப்படியெல்லாம் ஒருவரை கண்டுபிடிக்க முடியுமா?' என்று மிகவும் ஒரு ஏளனமாக கேட்டதாக தகவல் இருக்கின்றது. அதே போல்தான் எங்களுடைய தமிழ் தேசிய கட்சிகளுக்கும் தமிழ் பொது வேட்பாளருக்கு எதிரான மனநிலை இருந்தன. ஆனால் நாட்கள் செல்லச் செல்ல, ராஜதந்திரிகளுக்கு கூட ஒரு நம்பிக்கை வந்துள்ளது. புலம்பெயர் தேசத்தில் உள்ள மக்கள் தமிழ்ப்பொது வேட்பாளருக்கு பெரும் ஆதரவை வழங்கிக்கொண்டு இருக்கிறார்கள். அவர்கள் பொது வேட்பாளர் குறித்து தாங்கள் வாழும் தேசத்தில் ராஜதந்திர ரீதியாக கூறுவார்கள், கையாளுவார்கள். அது இன்னுமொரு பரிணாமத்தில் விரிவடையும்.

• • •

## திருகோணமலை ... தொடர்ச்சி ...

பகுதிகளும் வலிந்து ஆக்கிரமிக்கப்படுவதால் ஆயிரக்கணக்கான தமிழ் மக்கள் தமது வாழ்வாதாரங்களை இழந்துள்ளனர். பாரம்பரியமாக விவசாயம் மற்றும் மீன்பிடியில் ஈடுபட்டுள்ள தமிழர்களின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. தமது நிலங்களை மீட்க முயல்பவர்கள் சட்டரீதியான தடைகளையும் அச்சுறுத்தல்களையும் எதிர்கொள்கின்றனர் என உள்ளூர் தமிழர்கள் கூறுகின்றனர்.

'எமது எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. நாம் விவசாயம் செய்யவும் முடியாது மீன் பிடிக்கவும் முடியாது. இந்த நிலைமை தொடருமானால், எமது வழித்தோன்றல்கள் இந்த கிராமத்தில் தொடர்ந்து வசிக்கும் சாத்தியம் இருக்காது' என குச்சவெளியை சேர்ந்த ஒரு மீனவர் கூறினார். சிங்கள அரசாங்கத்தின் அடக்குமுறையின் மத்தியிலும், துணிச்சலுடன் நீதிக்காக குரல் எழுப்பும் பாதிக்கப்பட்ட பொது மக்களின் வாக்குமூலங்களை 'ஆக்கிரமிப்பின் கீழ் திருகோணமலை' என்ற இந்த அறிக்கை உள்ளடக்கியிருக்கின்றது.

'உள்நாட்டு யுத்தத்தின் போதும் இன்று வரையிலும் இலங்கை அரசு மேற்கொண்டுள்ள குற்றங்களுக்கான பொறுப்புக்கூறல் மற்றும் பரிகாரம் ஆகியவற்றுக்கான எந்தவொரு சாத்தியத்தையும் இந்த அறிக்கையில் ஆவணப்படுத்தப்பட்டுள்ள தீவிரம் அடைந்துள்ள இலங்கையின் இனரீதியான நடவடிக்கைகள் (ethnocratic practic-es) இல்லாமல் செய்வதுடன் ஏற்கனவே இருக்கும் துன்பம், அநீதி, பகையுணர்வு ஆகியவற்றை மேலும் அதிகப்படுத்துகின்றன.

தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களின் நிலம் மற்றும் வாழ்வு ஆகியவற்றுக்கான அடிப்படை உரிமைகளை அரசாங்கம் மதித்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களை இராணுவமயமற்றதாக ஆக்க ஆரம்பித்தால் அன்றி, சமாதானமும் நல்லிணக்கமும் சாத்தியம் ஆகாது ' என மிட்டல் மேலும் குறிப்பிட்டார்.

உலகிலேயே இரண்டாவது சிறந்த இயற்கை துறைமுகம் திருகோணமலை துறைமுகம் எனவும் அங்கிருக்க கூடிய நிலம் மற்றும் கடற்பரப்பு கொழும்பு துறைமுகத்தைவிட 10 மடங்கு அதிகம் இலங்கை அரசின் துறைமுக அதிகார சபையின் உத்தியோகபூர்வ இணையதளத்தில் கூறப்பட்டுள்ளது.

• • •

## ஒரு தேர்தலும் ... தொடர்ச்சி ...

இந்த மூன்று வல்லரசுகளுக்கும் வேண்டிய மூவர் இலங்கையின் அரச தலைவராக வரமுடியாது.

எனவே ஒரு இலங்கையினுள் அவர்கள் தமக்கான நலன்களைத்தேட முடியாது என்பதே இன்றைய பூகோள அரசியல் யதார்த்தம். அதனைத்தான் தமிழ் பொதுவேட்பாளரும் உணர்த்தி நிற்கின்றார். அதாவது ஒரு தேர்தல் இரு தேசங்கள். அந்த யதார்த்தத்தை நாம் சரியாக கையாளவேண்டும் என்றால் எமக்கான ஒருங்கிணைவு தேவை. கிட்டுபூங்காவில் இடம்பெற்ற தமிழ்பொதுவேட்பாளரின் கூட்டத்தை ஆர்வத்துடன் பார்த்து நின்ற ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்களின் ஆவலும் அதனை தான் மறைமுகமாக கூறி நிற்கின்றது.

எனவே தமிழால் ஒன்றிணைவோம், தமிழராக பலமாவோம். எமக்கான தேசத்தை கட்டியமைக்கும் முதல் வேலைத்திட்டத்தில் ஒன்றாக இணைந்து எமது ஒருங்கிணைவின் அடையாளமாக சங்கிற்கு வாக்களிப்போம்.

• • •

## மோதல்கள் ... தொடர்ச்சி ...

- போரின் வடுக்களினால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கும்,ஆசிரியர்களுக்கும் உள ஆற்றுப்படுத்தல் வழிகாட்டல்களை வழங்குதல்.

இவ்வாறான வழிமுறைகளைப் பின்பற்றி போரில் ஈடுபட்டு;சகொண்டிருக்கின்ற அரசாங்கங்களும், ஆயுதக் குழுக்களும் மனிதாபிமான அடிப்படையில் செயற்பட்டு சிறுவர்களின் பாதுகாப்பையும்,அவர்களது கற்றல் செயற்பாடுகளையும் பாதிக்காத வகையில் செயற்படவேண்டும் என்பதே அனைவரினதும் எதிர்பார்க்கைகளாகும். பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களை தாக்குதலில் இருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுப்பதற்கான நடவடிக்கைகளை ஐக்கிய நாடுகள் அமையம் எடுத்துள்ள இந்தச் சந்தர்ப்பத்தில சகல நாடுகளும் போராளிக் குழுக்களும் மனிதாபிமான சட்டங்களை மதித்து நடக்கவேண்டும்.

**முற்றும்**

## லெபனானில் ... தொடர்ச்சி ...

காயமடைந்தவர்களில் லெபனானுக்கான ஈரானின் தூதுவர் மற்றும் ஹிஸ்புல்லா அமைப்பின் பல அதிகாரிகள் அடங்கியுள்ள துடன், இந்த தாக்குதலில் 8 இற்கு மேற்பட்ட ஹிஸ்புல்லா உறுப்பினர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

செல்லிடதொலைபேசிகளின்உரையாடல்களை இஸ்ரேலிய உளவு அமைப்பு ஒட்டுக் கேட்பதால் கடந்த பெப்ரவரி மாதம் முதல் ஹிஸ்புல்லா அமைப்பு பேஜர் எனப்படும் செய்தி பரிமாற்றக் கருவிகளை பயன்படுத்தி வந்திருந்தது. இந்த நிலையில் அவர்கள் புதிதாக கொள்வனவு செய்த கருவிகளில் இஸ்ரேலிய புலனாய்வு அமைப்பு வெடிக்கும் கருவிகளை மின்கலங்களுடன் இணைத்து பொருத்தியதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த சம்பவத்தை தொடர்ந்து மேற்குலக நாடுகளின் செல்லிடத் தொலைபேசிகள் மற்றும் இலத்திரனியல் உபகரணங்கள் போர் ஆயுதங்களாக மாற்றப்படும் சாத்தியங்கள் உள்ளது குறித்து மக்கள் கடுமையான அச்சத்தில் இருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

## இந்தியா ... தொடர்ச்சி ...

ஒரு தவறான தக வல், இவ்வாறான தகவல்களை வெளியிடுவதற்கு முன்னர் குறிப்பிட்ட நாடுகள் தமது நாட்டில் உள்ள சிறுபான்மை இன மக்கள் எவ்வாறு நடத்தப்படுகின்றனர் என சிந்திக்க வேண்டும் என இந்திய வெளிவிவகார அமைச்சகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்துள்ளது.

இதற்கு முன்னரும் இந்தியாவில் முஸ்லீம் மக்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் வன்முறைகள் தொடர்பில் ஹமேனி கருத்துகளை வெளியிட்டே வந்துள்ளார். 2020 ஆம் ஆண்டு டில்லியில் ஏற்பட்ட வன்முறையில் 53 பேர் கொல்லப்பட்டும் நூற்றுக்கணக்கானவர்கள் காயமடைந்தபோதும் அதனை அவர் முஸ்லீம் மக்கள் மீதான படுகொலை எனவும் உலகில் உள்ள முஸ்லீம் நாடுகளில் இருந்து இந்தியா தனிமைப்படுவதை தவிர்க்க வேண்டும் எனவும் குறிப்பிட்டிருந்தார்.

2019 ஆம் ஆண்டு கஸ்மீரில் உள்ள முஸ்லீம் மக்களின் காணி அதிகாரத்தின் 370 ஆவது சரத்தை இந்தியா நீக்கியதற்கும் அவர் தனது கவலையை வெளியிட்டிருந்தார்.

இலக்கில் வெளிவரும் ஆக்கங்கள் அனைத்துக்கும் ஆக்கியவர்களே பொறுப்பு.
அவற்றில் உள்ள கருத்துக்கள் இலக்கின் கருத்துக்களாக பார்க்கப்பட வேண்டுமென்பதில்லை.

# தமிழ் பொது வேட்பாளரும் மக்களும்..







